SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume:1, Issue: 4, Pages:56
November-2021, Price Rs.5/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

நவம்பர் 2021

விலை ரூ.5/-



## திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம்

11-11-2021



## திருச்சானூர்

# ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம்

**2021 நவம்பர்**
**29 முதல் டிசம்பர் 08 வரை**

**29-11-2021 திங்கட்கிழமை**
பகல் : லக்ஷ குங்குமார்ச்சனை
இரவு : சேனாதிபதி உத்ஸவம்,
அங்குரார்ப்பணம்

**30-11-2021 செவ்வாய்க் கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சிறிய சேஷ வாகனம்

**01-12-2021 புதன் கிழமை**
பகல் : பெரிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**02-12-2021 வியாழக்கிழமை**
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**03-12-2021 வெள்ளிக்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத்வாகனம்

**04-12-2021 சனிக்கிழமை**
பகல் : பல்லக்கு உற்சவம்,
மாலை : வசந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**05-12-2021 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : சர்வபூபால வாகனம்
இரவு : கருட வாகனம்

**06-12-2021 திங்கட்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**07-12-2021 செவ்வாய்க்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**08-12-2021 புதன் கிழமை**
பகல் : சக்கரஸ்நானம்-பஞ்சமி தீர்த்தம்
இரவு : துவஜாவரோஹணம்



அர்ஜுந உவாச

த்$_3$ருஷ்ட்வேமம் ஸ்வஜநம் க்ருஷ்ண
யுயுத்ஸும் ஸமுபஸ்தி$_2$தம் ॥
ஸீத$_3$ந்தி மம கா$_3$த்ராணி
முக$_2$ம் ச பரிசுஷ்யதி ।
வேபது$_2$ச்ச சரீரே மே
ரோமஹர்ஷச்ச ஜாயதே ॥

அர்ஜுனன் கூறுகிறார் – "ஸ்ரீகிருஷ்ணா! போர்க்களத்தில் ஒருங்குகூடி நின்று போர் புரிய விரும்புகின்ற இந்த உறவினரின் கூட்டத்தைப் பார்த்து, என் அங்கங்கள் சோர்வடைகின்றன; வாயும் உலர்கிறது. அவ்வாறே என் உடலில் நடுக்கம் ஏற்படுகின்றது; மயிர்சிலிர்ப்பும் ஏற்படுகின்றது.

– ஸ்ரீமத் பகவத் கீதை 1–29

ஸ்ரீசைலேசத$_3$யாபாத்ரம்
தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$
ரம்யஜாமாதரம் முநிம் ॥

திருமலையாழ்வார் என்னும் திருவாய்மொழிப்பிள்ளையின் கருணைக்குப் பாத்திரமானவரும், ஜ்ஞாநபக்தி வைராக்யாதி குணங்களுக்குக் கடலாயிருப்பவரும், எம்பெருமானாரிடம் ஈடுபட்டிருப்பவருமான மணவாள மாமுனிகளை வணங்குகிறேன்.

- குருபரம்பராப்ரபாவத் தனியன்





திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# “ஶ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை”

*“மானிட சேவையே மாதவன் சேவை”* எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி. தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஶ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஶ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஶ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஶ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து “ஶ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை” யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**திட்டத்தின் நோக்கங்கள் :**

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத் தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம் படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவி களை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக் கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வச தியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம் பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலா பம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

**ஶ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :**

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஶ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப் படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் - “செயலாட்சித் தலைவர், ஶ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி” எனும் பெயரில் காசோலை/வங்கி கேட்பு வரைவோலையை “பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507” எனும் முகவரிக்கு அனுப்பவும்.




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

## நவம்பர் 2021

மலர் 01
இதழ் 04


உள்ளுறை — பக்கம்


| தலைப்பு / ஆசிரியர் | பக்கம் |
|---|---|
| தீபாவளியும் திருமகளும் - திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா. | 7 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் : அலர்மேல் மங்கை உறை மார்பா! - பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 11 |
| தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன் - திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி. | 15 |
| ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : த்ருடவ்ரதன் - திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை. | 18 |
| துஞ்சும் போது அழைமின் துயர்வரில் நினைமின் - திரு. எஸ். சுதர்ஸனம், நங்கைநல்லூர். | 21 |
| மானுடவியல் சார்ந்த கிரக சாஸ்திரம் -முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, திருவல்லிக்கேணி. | 24 |
| முனிவாஹனரும், அணியரங்கனும் - திருமதி பட்டம்மாள் ஜெகன்நாதன், அம்பத்தூர். | 31 |
| யோக சாஸ்திரம் : சூரிய நமஸ்காரமும் யோகாசனங்களும் - டாக்டர் கி.ஜ. நிகிலாவெங்கட், கோயம்பத்தூர். | 34 |
| 108 திவ்யதேச வைபவம் – திருவண்பரிசாரம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 37 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 40 |
| ஆயுர்வேதம் : கொண்டைக்கடலை - திருமதி உஷா, திருப்பதி. | 43 |
| ஸ்ரீமத் பகவத்கீதை - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 45 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : வால்மீகி(யார்) - திரு. சத்யதாரா, சென்னை. | 48 |
| நீதிக்கதைகள் : பக்தி - திரு. வி. பி. அர்த்தனாரி, கோவை. | 51 |
| சித்திரக்கதை : திருப்பாணர் | 52 |



சிறப்பு ஆசிரியர் :
Dr. K.S. ஜவஹர் ரெட்டி, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360



நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : ஸ்ரீதேவி பூதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : திருமலை ஆலயத்தில் தீபாவளி

உங்களுடன்...

# தீபாவளியும் தீபவொளியும்

மனிதன் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவே இருக்க விரும்புகிறான். அவன் மகிழ்ச்சியாக இருக்கும் வரை மற்றவருக்கு தீங்கு வருவதில்லை. ஆனால் அவன் துன்பத்தில் துவண்டிருக்கும்போது அடுத்தவனை காண்கிறான். மற்றவனின் மகிழ்ச்சியைக் காண அவன் பொறுப்பதில்லை. தன் துன்பத்தை மற்றவனும் பெற எண்ணுகிறான். இத்துன்பம் சங்கிலி தொடராகின்றது. இதன் விளைவு இறுதியில் குழப்பமும் வீழ்ச்சியும் தான். இதற்கான அடிப்படை காரணமே மனிதனின் தீயச் சிந்தனையேயாகும்.

மனிதனின் இந்த பலவீனமான குறைபாடுகளை மனதில் கொண்டுதான் நம் ஆன்றோர்களும் பல பண்டிகைகளையும், அவற்றின் பின்னணியாக பல புராண நிகழ்வுகளையும் விட்டுச் சென்றுள்ளனர். இப்பண்டிகைகளில் முதன்மையானது தீபாவளியாகும். ஞான மார்க்கத்தினை பற்றி கூறுவதில் பகவத் கீதை முதன்மையானதாக விளங்குவதை போன்று, பண்புகளால் தீபாவளி ஓர் உன்னதமான இடத்தை வகிக்கின்றது.

தன் ஸ்பரிசத்தினால் பூமிதேவிக்குப் பிறந்த நரகாசுரனை சத்யபாமாவின் துணையோடு ஸ்ரீகிருஷ்ணன் அழித்த திருநாளே தீபாவளி என்பது புராணக்கதை. புத்திர சோகத்தினால் தான் வருந்தினாலும் மற்றவர் வருந்துவதை மறந்து, கொடுமைகள் மறைந்து புதுமைகள் மலரும் ஒரு புனித நாளாகக் கொண்டாடப்பட வேண்டும் என சத்யபாமா இறைவனிடம் வேண்டினார். இது ஒரு தாயின் தியாக உணர்ச்சியையும், பரந்த மனப்பாண்மையின் உணர்ச்சியினையும் நமக்கு விளக்குகிறது. ஒன்பது கோட்டை வாயில்களைக் கொண்ட நகரத்தின் தலைவனான நரகாசுரனை ஸ்ரீகிருஷ்ணன் கொன்றது, ஒன்பது வாயில்கள் கொண்ட இவ்வுடம்பில் இருக்கும் "நான்", "எனது" என்ற தன்னல உணர்வுகளை அழித்தலின் அவசியத்தை உணர்த்துவதற்குத்தான் எனும் தத்துவத்தை விளக்குவதாக இதை அறியமுடிகிறது.

இத்திருநாளின் போது தீபங்களை வரிசையாக ஏற்றுவது என்பது ஒரு வகை வழிபாடாகும். நம் தமிழகத்தில் தீபாவளியை விட கார்த்திகையில்தான் ஆலயங்கள் தோறும், வீடுகள் தோறும் மக்கள் தீபங்களை ஏற்றி இறைவழிபாடு செய்வர். அகல், எண்ணெய், திரி, சுடர் என்ற நான்கும் சேர்ந்தால் தான் ஒளி பெறப்படுகின்றது. அவ்வாறே அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கினையும் கடந்தால்தான் பேரொளியான பரம்பொருளை நாம் காண முடியும். இந்த தீபத்திருநாளின் போது பட்டாசுகளை வெடிப்பது என்பது வெடிமருந்து இருந்தும் வெடிக்காத ஜடமான பட்டாசுகளைப் போன்று எப்படி தீப்பட்டதும் அவற்றிலிருந்து ஒலியும், ஒளியும் பிறக்கின்றதோ, அதுபோன்று நமது அறிவுத்திரியானது ஞான உணர்வினால் பற்றப்பட்டால் நம்முள் ஆன்மா ஒளிரப் பெற்று அப்பரமனை பற்றிய பேருண்மை பெரும் சத்தமாக இதயத்தில் ஒலிக்கும் என்பதனை விளக்கத்தான் என்று அறியலாம்.

பிரம்மன், சிவன், விஷ்ணுவும் ஜோதி வடிவமேயாவர். வேதம் முதற்கொண்டு "இறையானது ஜோதி வடிவமே" என்கிறது. அனைத்து மதமும் இறை ஜோதி வடிவமே என்கின்றன. ஆதிகால மனிதனும் முதலில் ஜோதியை இறை வடிவமாக வணங்கினான் என இலக்கியங்களும் பகர்கின்றன. நம்மாழ்வாரும் "ஜோதி ஆகி எல்லா உலகும் தொழும் ஆதிமூர்த்தி" என்று இறைவன் ஒளி வடிவானவன் என்கிறார்.

அந்த ஒளிவடிவமான எம்பெருமான் கலியுக மக்களை காக்க, "தெழில் குரலருவி திருவேங்கடத்து எழில் கொள் சோதி" என்று நம்மாழ்வார் பாசுரமிட்டது போன்று ஒலிக்கின்ற அருவிகளை உடைய வேங்கடத்திலே ஒளிர்கின்ற அர்ச்சை வடிவிலே எழுந்தருளியுள்ளார். இந்த திருவேங்கடவனுக்கும் தீப ஒளி நாளன்று மிக விமரிசையாக ஆஸ்தானம் (தர்பார்) நிகழ்த்தப்படுகிறது. தீபஒளி நாளன்று ஆலயமே தீப ஒளியில் மிளிரும்.

உயர் சான்றோர்கள் உலகுக்கு உணர்த்திய அரிய செய்திகளையும் நெறிகளையும் இந்தத் தீபவொளி பண்டிகை தத்துவப் பொருளுடன் கலந்து சிந்திக்கத் தலைபட்டால் எதிர்காலத்தில் நாம் மகிழவும் பிறரை மகிழ்விக்கவும் வழிவகுக்கும்.





# தீபாவளியும் திருமகளும்

- திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா,
9946128102

தீபாவளி மிக முக்கியமான பண்டிகையாகும். இந்த பண்டிகை இந்தியாவில் பல மாநிலங்களில் பலவிதமாகவும், பல நாட்களாகவும் கொண்டாடி வழிபடுகிறார்கள். மஹாலட்சுமி, தன்வந்திரி, மஹாவிஷ்ணு, பார்வதி, பரமசிவன், கணபதி, குபேரன், யமதர்மராசா, வாமன மூர்த்தியாக, இராமனாக, கண்ணனாக பல மாநிலங்களில் கொண்டாடுகிறார்கள். ஒரு ஒற்றுமை என்னவென்றால், மஹாலட்சுமி வழிபாடும், தீபம் ஏற்றுவதும் பொதுவாக, பெரும்பாலான மாநிலங்களில் வழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

புராணங்களில் ஸ்ரீராம சீதா லட்சுமணர்கள் வனவாசம் முடிந்து அயோத்தி திரும்பிய நாளாகவும்,







தீபாவளி நல்வாழ்த்துகள்

வாசகர்களுக்கும்,
முகவர்களுக்கும்,
எழுத்தாளர் பெருமக்களுக்கும்
உளம் கனிந்த இனிய
தீபாவளி நல்வாழ்த்துகள்

பிரதான ஆசிரியர்

வடமாநிலங்களில் வரிசையாக தீபங்களை ஏற்றி வைப்பார்கள். ஸ்ரீராமபிரான், லக்ஷ்மணன், சீதா தேவியுடன் அயோத்தி திரும்பும் போது, அவ்வூர் மக்கள் மிக உற்சாகத்துடன் வரிசையாக தீபம் ஏற்றி வரவேற்றார்களாம்.



வாமன மூர்த்தியால் பாதாள உலகத்திற்கு சென்ற மகாபலி சக்ரவர்த்தி பிரதமை அன்று (பலி பாட்டியமை) அன்று பாதாள உலகத்திலிருந்து பூலோகத்திற்கு வருகை புரிந்து மக்கள் அனைவருக்கும் கேட்கும் வரத்தை வழங்குவதாக ஐதீகம்.

கண்ணனும் சத்யபாமாவும் நரகாசுரன் என்ற கொடிய அசுரனை வதம் செய்து தேவர்கள் மற்றும் தேவ கன்னிகைகளை விடுவித்த நாளாகவும், மஹாபலிச் சக்ரவர்த்தி பாதாள லோகத்திலிருந்து வருடத்திற்கு ஒரு நாள் பூமியை காண வருவதாகவும், அம்ருத மதனத்தின் போது தேவி மஹாலட்சுமி அவதரித்த நாளாகவும்,

அதே பாற்கடலில் மஹாவிஷ்ணுவின் அவதாரமாக தன்வந்தரி பெருமாள் அம்ருத கலசத்தை ஏந்தி தோன்றிய நாளாகவும், கணபதியை பூஜிக்கும் நாளாகவும், தேவி மஹாலட்சுமி எல்லோர் வீட்டிற்கும் வந்து அருள்பாலிக்கும் நாளாகவும், கிருஷ்ண அவதாரத்தில் கண்ணன் கோவர்த்தன மலையை குடையாகப் பிடித்து வ்ருந்தாவனத்தை காத்து, அன்னக்கூட்டு உத்ஸவம் நடந்த நிகழ்வாகவும் புராணங்களில் கூறப்பட்டுள்ளது. இதை தவிர, கோபூஜை, கங்கா ஸ்நானம் போன்ற புண்ணிய காரியங்களை செய்யும் சிறந்த நாளாக தீபாவளி பண்டிகை உள்ளது.

இரண்டு முதல் ஐந்து நாட்களாக வெவ்வேறு மாநிலங்களில் இந்த பண்டிகை கொண்டாடுவார்கள்.

முன்பே கூறியது போல, மஹாலட்சுமி தேவியின் வழிபாடு வடமாநிலங்களில் முக்கியத்துவமாகும். கணபதியுடன், மஹாலட்சுமியை சேர்த்து வழிபட வேண்டும் என்கிறது சில வழக்கங்கள்.

தென் மாநிலங்களில் தீபாவளி அன்று விடியற்காலையில் எழுந்து மஞ்சள் தேய்த்து சில வீடுகளில் வெற்றிலைப் பாக்கு உண்ட பிறகு, நல்லெண்ணெயை வீட்டில் பெரியவர்கள் சிறியவர்களின் தலையில் தேய்த்து விடுவார்கள். ஒரு நாள் முன்பே காய்ச்சிய நல்லெண்ணை, மிளகு, சிவப்பு மிளகாய் சூடு செய்து வைத்திடுவார்கள். அன்றைய குளியல் "கங்கா ஸ்நானம்" என்று கூறப்படும். ஏனெனில் கங்கா மாதா எல்லோருடைய வீட்டிலும் குளிக்கும் நீரில் கலப்பதாக ஐதீகம்.

பின்னர் புத்தாடை அணிந்து, இனிப்பு மற்றும் கார பண்டங்களை பகவானுக்கு நிவேதனம் செய்த பிறகு உண்ண வேண்டும். பக்ஷணங்களை உண்பதற்கு முன்பு "தீபாவளி மருந்து" என்ற சூரணத்தை உண்ண வேண்டும். இஞ்சி அல்லது சுக்கு, தனியா, மிளகு, சீரகம், தேன், நெய் மற்றும் வெல்லத்துடன்

குழைத்து சூரணமாக உண்ண வேண்டும். சித்த மருந்து, நம் வயிற்றுக்கு மிக நல்லது. இதை "தீபாவளி லேகியம்" என்றும் கூறுவார்கள். பின்னர் குழந்தைகள் பட்டாசுகளை வெடிப்பார்கள். இரவு நேரத்தில் மாலை பொழுதுடன் விளக்குகள் ஏற்றி வைப்பார்கள்.

லட்சுமி பூஜையின் போது மஹாலட்சுமியின் அஷ்டோத்திரம், மஹாலட்சுமி அஷ்டகம், மஹா லட்சுமியின் வைபவம் எல்லாம் வாசிப்பார்கள். சிலர் பூஜாரியை வைத்து அர்ச்சனை செய்வார்கள். இந்த பூஜைக்கு முன்பு கணபதி அர்ச்சனை செய்வார்கள். சிலர் "சுபம்", "லாபம்" என்று எழுதிய பலகையையும் வைப்பார்கள். சிலர், தன் வியாபார காசுப்பெட்டியை பூஜையில் வைப்பார்கள்.

பூக்களில் தாமரை மற்றும் துளசியால் பூஜிப்பார்கள். வங்க தேசத்தில் துர்கா தேவியை லட்சுமியின் வடிவமாக பூஜிப்பார்கள். மஹா லட்சுமி மந்திரம், மஹாலட்சுமி காயத்ரி முக்கியமாக ஜபிப்பார்கள். வீட்டில் உள்ள பெண்கள் மற்ற பெண்களுக்கு குங்குமம், மஞ்சள் வைத்து தாம்பூலம் கொடுப்பார்கள்.

இந்த லட்சுமி பூஜை, எல்லாவித தடங்கல்கள் நீங்கி, வாழ்க்கையில் நல்ல சுபிக்ஷமாக, லட்சுமி கடாக்ஷமாக, நற்பலங்களை கொடுக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன. வீட்டு வாயிலில் இல்லம் தேடி வந்து நம்முடன் மஹாலட்சுமி வாசம் செய்வாள் என்பதும் ஐதீகம். மஹாகணபதியை பூஜிப்பதால் எல்லாவித தடைகளும் நீங்கி நல்வாழ்வு கிட்டும் என்பது ஐதீகம்.

கோவர்த்தன மலைக்கு சிறப்பு பூஜை செய்து, பலவித அன்னங்களை படைத்து பூஜை செய்ய வேண்டும் என்று கண்ணன் கூறினர். அவ்வாறே வ்ருந்தாவன மக்கள் பூஜித்தார்கள்.

தனக்கான பூஜையை கோவர்த் தனத்திற்கு அளித்ததால் இந்திரன் கோபம் அடைந்து கடுமையான மழை பொய்வித்தார். ஆனால், கண்ணபிரானோ, அதே கோவர்த்தன மலையை குடையாகத் தூக்கி காத்தார். அதனால்தான் ஆழ்வார்கள் "கோவர்த்தனம்" என்னும் **''கொற்ற குடையே''** என்று போற்றுகிறார்கள். ஆண்டாள்



**"கோவர்த்தன பூஜை" என்றும் "அன்னக்கூட்டு" உத்ஸவம் என்றும் வ்ருந்தாவனத்தில் மிக கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.**

**"லட்சுமி" என்றால் "பணம்" என்பதல்ல. "லட்சுமி" என்றால் "சுபிக்ஷம்" எல்லாவித நன்மைக்காவும் பணமாகவும், ஆரோக்கியம், ஆயுள், ஐச்வர்யம் அன்னம், பயிர்களின் வளர்ச்சி போன்ற மகிழக்கூடிய விஷயமாகும்.**

**கண்ணன், வ்ருந்தாவனத்தை சிறப்பாக "லட்சுமி கடாக்ஷமாக" விளங்க வைப்பது "கோவர்த்தனம்" என்னும் கொற்ற குடையாகும்.**



வடமாநிலங்களில் ‘‘லட்சுமி பூஜை’’ மிக மிக முக்கியமானது. வீடுகளை அலங்கரித்து, ‘‘ரங்கோலி’’, வண்ணமிகு கோலங்கள் இட்டு, பூக்களால் வீட்டை அழகு அலங்காரம் செய்வார்கள். வீட்டு வாசலில் வரிசையாக தீபம் ஏற்றுவார்கள். பூஜை அறையில் கணபதி மற்றும் மஹாலட்சுமியின் உருவ சிலை அல்லது படத்திற்கு சந்தனம் மற்றும் குங்குமம் இட்டு, பீடம் அமைத்து, கோலம் இட்டு அமர்த்துவார்கள்.



வீட்டில் உள்ள அனைவரும் ஒன்று கூடி பால், தயிர், வெண்ணெய், பழங்கள், உலர்ந்த பழங்கள், இனிப்பு வகைகள் எல்லாம் நைவேத்தியத்திற்கு வைப்பார்கள். பூஜை அறையில் தீபம் மற்றும் தூபம் ஏற்றுவார்கள். சிலர் “ஸ்வஸ்திக்” படம் வரைந்து, சில்லறை மற்றும் பணம், நகைகளை வைப்பார்கள். சிலர், தேங்காய் கும்பம் வைத்தும் வழிபடுவார்கள்.

“குன்று குடையாவெடுத்தாய் குணம் போற்றி” என்று கண்ணனை போற்றுகிறார். பின்னர், அந்த பக்ஷணங்களை உறவினர் மற்றும் நண்பர்களுக்கு கொடுப்ப ர். இதனால் உறவு பலப்படும் என்பது உறுதியாகும்.

மிக சுவாரஸ்யமான ஒரு விஷயம் பங்கு வர்த்தகத்தில் “முஹுர்த்த வர்த்தகம்” இந்த நாள் அன்று நடத்தப்பட்டு, பங்குச்சந்தை மாலையில் சிறிது நேரத்திற்கு தொடங்கி சிறிய வர்த்தகம் செய்து முடிப்பார்கள். இந்த வர்த்தகத்தில் உறவினர்களுக்காக பங்குகள் வாங்குவது வழக்கம். இந்த வழக்கம் “மஹா லட்சுமியின் சிறப்பை” காட்டுகிறது. அவள் மங்களமாக நிறைந்து அருள்பாலிக்கிறாள் என்று நம்பப்படுகிறது. கண்ணனே “ஸ்ரீபதி” ஆவார். *‘‘அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா’’* என்று நம்மாழ்வார் கூறியது போல, தாய் மஹாலட்சுமி மஹாவிஷ்ணுவின் திருமார்பை விட்டு விலகாமல் என்றும் அருள்பாலிக்கிறாள். அதனால், நாம் லட்சுமி நாராயணரை, இந்த தீபாவளி தினத்தில் சேவித்து அருள் பெறுவோமாக.

## திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம் திருப்பதியிலிருந்து கி.மீ.களில்

1) ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர் ...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி ...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயண வனம்...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயம், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.




# அலர் மேல் மங்கை உறை மார்பா!

**பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,**
**புவனகிரி, 94434 39963**

வேதம் எல்லையற்றது. வேதத்தின் அளவை அறிய முடியாதது போலவே அதனுடைய பெருமையையும், அது காட்டும் பரப்ரம்மத்தின் உண்மைத் தன்மையையும் எளியோர்களால் விளங்கிக் கொள்ள முடியாது.

ஆனால், அந்தப் பரப்ரம்மத்தின் உண்மைச் சொரூபத்தை எளிமையாக நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே, இறைவன் ஐந்தாவது நிலையாக அர்ச்சாவதார நிலைகொண்டு, கோயில்களில் பல்லாயிரம் ஆண்டுகளாக எழுந்தருளி இருக்கின்றார்.

இந்த அர்ச்சாவதார வைபவத்தை திருமங்கையாழ்வார் "பின்னானார் வணங்கும் சோதி" என்று மங்களாசாசனம் செய்கின்றார்.

வேதத்தின் உயர்ந்த விளக்கங்களை எல்லாம் அழகு தமிழில் அற்புதமான பாசுரங்களாக அருளிச் செய்திருக்கிறார்கள் ஆழ்வார்கள்.

வேதங்களில் மூழ்கி முத்தெடுத்து, வேதத்தின் சாரத்தை தமிழ் எனும் அமுதத்தில் சாறெடுத்து, இந்த ஊரும் உலகமும் உய்ய வேண்டும் என்கின்ற உயர்ந்த நோக்கத்தில் அருளிச் செய்திருக்கிறார்கள்.

*"ஊழி தோறும் உலகம் உய்ய உம்பர்களும் கேட்டு உய்ய"* என்று பாடியவர்கள் ஆழ்வார்கள்.

ஆழ்வார்களில் தலைமை ஆழ்வாரான நம்மாழ்வார், நான்கு வேதங்களுக்கு நிகராக, நான்கு பிரபந்தங்களைக் கொடுத்திருக்கிறார்.

அதிலே சரம பிரபந்தம் திருவாய்மொழி.

"யாழின் இசை வேதத்து இயல்" என்று திருவாய்மொழியைச் சொல்லுவார்கள். "திராவிட உபநிடத சாரம்" என்று நாதமுனிகள் மங்களாசாசனம் செய்கின்றார். திருவாய்மொழியை பகவத் விஷயம் என்று சொல்லி, மூன்று மஹாமந்திரங்களில் "மந்திர ரத்தினம்" என்று சொல்லப்படும் துவய மஹா மந்திரமே திருவாய்மொழி என்று பெரியவர்கள் சாதித்திருக்கிறார்கள்.

திருவாய்மொழியின் ஒட்டு மொத்தமான கருத்தை ஆழ்வார் '*"உலகம் உண்ட பெருவாயா"* என்ற திருவேங்கடப் பதிகத்தில் அருளியிருக்கிறார்.



இந்தத் திருவாய்மொழியை, உயிரான திருவாய்மொழி என்று ஆசாரியர்கள் அருளிச் செய்திருக்கிறார்கள்.

திருவாய்மொழியின் உயிரான பாசுரம் நம்மாழ்வார் பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு எம்பெருமானிடம் சரண் புகுந்த பாசுரம்.

இந்தத் திருவாய்மொழியில் ஒன்பது பாட்டாலும் சரண்யனான சர்வேச்வரனுடைய ஸ்வரூபத்தையும் தம்முடைய ஆற்றாமையையும் சொல்லிய ஆழ்வார், இப்பாட்டில் தம்முடைய (பிரார்த்தனை விருப்பம்) அபேக்ஷிதம் சடக்கென, ஆகிஞ்சந்யத் தையும் (கை முதல் இல்லாமை), அநந்யகதித்வத்தையும் (வேறு கதி இல்லாமை) தெரிவித்துக் கொண்டு திருவேங்கடமுடையான் திருவடிகளிலே சரணம் புகுகிறார்.

"'அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறைமார்பா
நிகர்இல் புகழாய் உலகம் மூன்று உடையாய் என்னை ஆள்வானே
நிகர் இல் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே
புகல் ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே"

வைணவ சம்பிரதாயத்தின் அடிநாதமான கருத்து. இந்தப் பாசுரத்தில் பிழிந்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு மனிதனுக்கு பிரபத்தி ஒன்றே உய்வு தரக் கூடியது. இந்த பிரபத்தியான சரணாகதியின் மேன்மையைச் சொல்லுகின்ற சாஸ்திரம் இராமாயணம்.

சரணாகதி சாஸ்திரத்தின் அர்த்த பாவமாக நிற்பவன் அதனால் தான் இராமாநுஜர், ஸ்ரீராமாயணத்தின் தாத்பரிய சாரார்த்தத்தைப் புரிந்து கொள்ள ஒரு வருட காலம், திருமலைக்கு வந்து தங்கி தன்னுடைய ஆசாரியரான பெரிய திருமலை நம்பிகளிடத்திலே பாடம் கேட்டார்.

ஆதிசேஷ அம்சமான அவர் ஆதி சேஷனாக நிற்கக் கூடிய திருமலையின் அடிவாரத்தில் (அலிபிரி) தங்கி, ஸ்ரீராமாயண தத்துவ விஷயத்தை சுவிகரித்தார்.

சரணாகதியின் முதல் நுழைவு வாசல் பிராட்டியின் சன்னதி.

ஆழ்வாரின் சரணாகதியின் முதல் நுழைவு வாசல் பிராட்டியின் சன்னதி.

பிராட்டியின் சன்னதியில் நுழையாமல் அல்லது பிராட்டியி னுடைய அனுக்கிரகம் இல்லாமல் ஒரு சேதனன் நேரடியாக எம்பெருமானை அணுகுவது ஏற்கத்தக்கதல்ல.

அவனும் அதை ஏற்றுக் கொள்ள மாட்டான்.

அலர்மேல் மங்கை என்ற பதத் திற்கு ரசித்து ரசித்து உரை வரைந் திருக்கிறார்கள்.

புஷ்பத்தின் பரிமளம் தானே ஒரு வடிவு கொண்டாப்போலே தோன்றின வளான ஸ்ரீமஹாலக்ஷ்மி அந்தப் பூவில் வசிக்க ருசியாதே அதை விட்டுத் திருமார்பிலே வந்து சேர்ந்தது, அப் பூவிற் காட்டிலும் ஸௌகுமார் யாதிசய முள்ள விடம் இத்திருமார்பே என்று. அவ்வளவு சிறந்ததான ஸ்தானம் கிடைத்ததும் இது நமக்கு நிலைக்குமோ நிலைக்காதோவென்று அதி சங்கை தோன்றுவது விஷய வைலக்ஷண்யப்ரயுக்தம் என்ற உரையை வாசிக்க வேண்டும்.

ஒரு ஜீவனின் சரணாகதியை தலைக்கட்டுவது பிராட்டியின் புருஷகாரம்.

சதா சர்வகாலமும் அந்தப் புருஷாகாரத்தை செய்ய வேண்டும்

என்று, வேறு எங்கும் நகராமல், அவனுக்குள்ளேயே திருமார்பில், ஒரு நொடியும் பிரியாமல் இருப்பவள் பிராட்டி. அதனால்தான், திருச்சானூரில் அலர்மேல் மங்கைத் தாயார் தரிசனம் இன்றி திருமலையப்பன் தரிசனம் செய்வது சிறப்புடையதாகாது என்று வைணவ மரபில் பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

பெருமாள் கோயில்கள் எதுவாக இருந்தாலும் பிராட்டியின் சன்னதியில் முதலில் அவளை தரிசித்து வி்ட்டு, பின்பு பெருமாள் சன்னதிக்கு வருவதால் அவனுடைய கோரிக்கை ஈடேறும்.

இதைத்தான், முதல் வரியிலேயே பிராட்டியின் வைபவத்தைப் பாடி, பிறகு பெருமாளின் வைபவத்தைப் பாடுகின்றார்.

**"அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை"** என்று முதலிலேயே அவளுடைய இருப்பை உறுதி செய்து கொண்டு, பெருமாளிடம் அணுகுகின்ற நம்மாழ்வார் அப்பொழுதுதான் ஒரு சேதனன் செய்யும் பிரபத்தி பலிக்கும் என்றார்.

பொல்லாத பாவம் செய்த காகம் பிழைத்தது இவளுடைய சன்னதியாலே அது இல்லாமல் இராவணன் முடிந்தான். வாலியும் இதை வகையாகச் சொல்கின்றான்.

"நீ உன் தேவியைப் பிரிந்த நேரம் என்பதால் என் ஆவி பிரிந்தது''. எனவே, பிராட்டியின் சன்னதி தான் பிரபத்தியின் தலைவாசல்.

பிராட்டியின் புருஷகாரம் அவ்வளவு தூரம் எம்பெருமானிடம் தலை கட்டி வைக்குமோ எனில் **"அகில**





**ஜகந்மாதரம்...''** என்கிறபடியே இவள் எல்லோருக்கும் தாயாய் விளங்குபவள்.

அந்த உறவால், இவர்களது துன்பம் கண்டு பொறுத்திருக்கமாட்டாத குணம் உடையவள்.

அதே சமயம் எம்பெருமானுக்கு இன்னுயிர் துணைவி, **"பித்தர் பனிமலர் மேல் பாவைக்கு"** என்கிறபடியே அவள் தன் அழகும் குணமும் கண்டு பிச்சேறி இருக்கிறான் அவன்.

திருவிடம் மால் கொண்டு, அவள் சொற்படி நடக்கிறான். (அவனை அழகாலும் சேதனனை அறிவாலும் திருத்துகிறாள்). எனவே, இவளுடைய புருஷகாரம் ஒரு வகையாலும் பயன் தராமல் போகாது.

இந்தப்பாசுரத்தில் இரண்டு முக்கியமான பதங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலில், **"இறையும் அகலகில்லேன்"** என்ற பதம். சற்று நேரம் கூட நான் நகர மாட்டேன் என்று இருக்கிறாள் பிராட்டி.



# துளசி



துளசி செடியானது மருத்துவ குணம் வாய்ந்த செடியாக இருப்பதோடு தெய்வ பூஜைக்கு உகந்த செடியாகவும் உள்ளது. கைசிக துவாதசியன்று துளசிக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன. துளசி மாடத்தில் ஸ்ரீகிருஷ்ணரின் பிரதிபிம்பத்தை வைத்து மாகோலங்கள் போட்டு, விளக்குகள் ஏற்றி, இனிப்பு வகைகளை நிவேதனம் செய்து சுமங்கலிகளுக்கு கொடுத்து கொண்டாடுகிறார்கள். துளசியை பூஜிப்பதால் அனைத்து செல்வங்களும் பெருகும் என்பது ஐதீகம்.

காரணம், தான் சற்று, அந்த பக்கம் இந்தப் பக்கம் சென்ற நேரத்தில், ஒரு சேதனன் வந்து, பெருமாளைச் சரணடைந்து, தான் இல்லாததால், சரணாகதி பலிக்காமல் போய்விட்டால் என்ன செய்வது? என்ற கவலை அவளுக்கு.

அந்த உணர்வு, எம்பெருமானின் திருமார்பில், நொடி நேரமும் பிரியாமல் பிராட்டியை இருக்க வைத்தது.

இப்பொழுதெல்லாம் ஒரு பெயர்ப் பலகையைப் பார்த்திருக்கலாம்.

வாரத்தின் ஏழு நாட்கள், ஒரு நாளில் 24 மணி நேரமும் எங்கள் சேவை உண்டு என்கின்ற பெயர் பலகையை 24 × 7 என்று மருத்துவமனையில் ஆரம்பித்து, மற்ற மற்ற இடங்களிலும் பார்க்கலாம்.

ஆனால் இந்த 24 மணி நேர ஏழு நாட்கள் சேவையை முதலில் அறிமுகப் படுத்தியது பிராட்டியார் தான்.

அவர்தான், ***"அகலகில்லேன் இறையும்"*** என்று அவன் திருமார்பில் நித்திய வாசம் செய்கின்றாள்.

பெருமாளை மங்களாசாசனம் செய்கின்றபொழுது,

***"ஒப்பற்ற புகழையும் உடையவனே***
***அமரர்களால் தொழப்படுபவனே***
***உலகங்கள் மூன்றினையும் உடைய சுவாமியே"***

இப்படி ஆழ்வார் பெருமானின் பல்வேறு தன்மை களைப் பெருமையாகப் பேசினாலும், இதெல்லாம் திருவாகிய அந்த பிராட்டியால் அல்லவோ உனக்குச் சித்தித்தது என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

1) "நிகரில் புகழாய்" என்று வாத்ஸல்யத்தைச் சொன்னார்.
2) "உலகம் மூன்றுடையாய்" என்று ஸ்வாமித்வத்தைச் சொன்னார்.
3) "என்னை யாள்வானே" என்று ஸெளசீல்யத்தைச் சொன்னார்.
4. "நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்புந் திருவேங்கடத்தானே" என்று ஸெளலப்யத்தைச் சொன்னார்.

இப்படி ஆழ்வார் பெருமானின் பல்வேறு தன்மைகளைப் பெருமையாகப் பேசினாலும், இதெல்லாம் திருவாகிய அந்த பிராட்டியால் அல்லவோ உனக்குச் சித்தித்தது என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

திருவோடு கூடிய மால் திருமால்

திருவோடு கூடிய மலை திருமலை

திருவோடு கூடிய சுவாமி திருமலையப்பன்

திருவோடு கூடியவன் திருவாழ்மார்பன் (ஸ்ரீநிவாசன்).

எனவே எல்லாப் பெருமையும் அவனுக்கு மகாலட்சுமி சம்பந்தத்தால் கிடைத்தது என்று சொல்லிய ஆழ்வார், சரணாகதியின் நியமமாக, கை முதல் இன்மை (ஆகிஞ்சன்யம்) என்பதை ***"புகல் ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே"*** என்று பாடி சரணம் புகுகின்றார்.

அவர் காட்டிய வழியில் கார்த்திகை மாதம் பிரம்மோத்ஸவம் நடக்க இருக்கின்றது.

திருச்சுகனூர் என்று சொல்லப்படுகின்ற திருச்சானூரில் அலர்மேல் மங்கை நமக்கு ஆனந்தமாக காட்சி தந்து கொண்டிருக்கிறாள்.

அவளுடைய திருவடி வாரத்திலேயே சரணம் புகுந்தால் இறைவனுடைய திருவடிவார பலம் நமக்குச் சித்திக்கும்.

தொடரும்...

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

விஜயதாசர் எம்பெருமானைப் பார்த்து பக்தர்களில் ஒரு சிலர் உமக்கு என்ன சேவை செய்தனர் என்று அவர்களின் இன்னல்களைப் போக்கிக் காப்பாற்றினீர்? அவர்கள் செய்தது என்ன? நான் செய்யாதது என்ன? ஸ்வாமி! தங்கள் திருமுகத்தைக் காட்டுவீராக என்று வேண்டினார்.

*“பகுத ப்ரஹலாத வினகேம தந்தித்த....”*

பக்த பிரகலாதன் உமக்கு என்ன தந்தார்? சுகமுனி உமக்கு என்ன உபகாரம் செய்தார்? நாரதர் உமக்கு என்ன சுகத்தைத் தந்தார்? ருக்மாங்கன் என்ன திருப்தியைத் தந்தார்? விபீஷணன் என்ன உதவியை செய்தார்? பக்தியுடன் மட்டும் வணங்கினரே ஸ்வாமி! நான் மட்டும் அந்நியனானேனா?

*“ஸூரபதியு முனிதேளு ஹகலிருமலெகரேயே”*

இந்திரன் ஏழு நாட்கள் இரவும் பகலுமாக கோகுலத்தின் மீது இடைவிடாமல் மழையைப் பெய்யச் செய்தார். அப்பொழுது பசுக்கள் மிகவும் இன்னலுற்றன. அச்சமயம் கோவர்த்தன கிரியை தன் கை விரல் மீது ஏந்தி, நிழலைத் தந்து, பசுக்களைக் காப்பாற்றினாய் அல்லவா? அவ்வாறே துர்வாச முனிவர் திரௌபதியின் இல்லத்திற்கு வருகை புரிந்து அன்னம் கேட்டார். அப்பொழுது திரௌபதியின் அச்சத்தைப் போக்கி உதவி செய்தாய் அல்லவா,

*“ஜலஜாக்ஷி பெட்டவனு பொத்து பளலிதாக ...”*

ஹே கிருஷ்ணா! நீ ஒரு நாள் மலையை கையிலேந்திய போது உமக்கு வெறுப்பாக இல்லையா? என் விஷயத்தில் ஏன் உமக்கு வெறுப்பு, ஸ்வாமி சேஷாசல வாசா, விஜய விட்டலா என்னைக் காப்பாற்று வாயாக.

வேங்கடவனைக் கண்ட பரவசத்தில் “நீரு” (தண்ணீர்) என்ற சொல்லை பலமுறை உச்சரித்து

5 சரணங்களைக் கொண்ட பல பாடல்களை பாடியுள்ளார். அவற்றில் சிலவற்றைக் காண்போம்

*“நோடிதெ கிரிய நிர்மலன நித்ய*
*மூடல திக்கினல்லிப்ப*
*நிர்மலனா”*

# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்



கண்டேன் மலையில் வீற்றிருக்கும் திருமலை நாயகனை. அவன் அனைத்து திசைகளிலும் உள்ள பக்தர்களுக்கு நிர்மலமானவன்.



*"நீரேர கூடாடிதவனா!*
*தேவ! நீரொளகெ சதனவ*
*பிகிதவனா! நீரத ஸ்யாம வர்ணவ!*
*பவ நீரஜ பவ வந்த்ய தயா சாகரனா!"*

இந்த சரணத்தில் 4 முறை "நீரு" என்ற சொல் வந்துள்ளது. நீரேர கூடாடிதவனா – கோபிகர்களோடு சேர்ந்து இருப்பவனே! நீரௌகெ சதனவ பிகிதவனா– கடலின் நடுவே த்வாரகையை நிர்மித்தவன் ! நீரத ஸ்யாம வர்ணன – நீரதம் என்றால் மேகம், மேக வர்ணன் என்றும், நீரஜ பவ வந்த்யுடு– கமலத்தில் தோன்றிய பிரம்மனால் பூஜிக்கப்பட்டவனே என்பது பொருள்.

*"நீரு பாததலி பெத்தவனா! மஹா!*
*நீரு தாடி மக்கள தோரிதவனா?*
*வீரிதி பிகித ப்ரபலனா?*
*அந்து பதிய பங்கவ மாடிதவனரி நீரு!"*

இந்த சரணத்திலும் "நீரு" என்ற சொல் 4 முறை வந்துள்ளது. நீரு பாததலி பெத்தவன் எப்படியென்றால் கங்காதேவியின் ஜன்ம தலமாகும். நீருதாடி மக்கள தோரிதவனா – ஹரிவம்சம் சமுத்திரத்தைத் தாண்டி கவரப்பட்ட 4 குழந்தைகளை ஸ்ரீ கிருஷ்ணர் மீட்டு வந்ததாக சொல்லப்பட்டுள்ளது. வீரிதி பிகித ப்ரபலனா – சமுத்திரத்தில் பாலம் அமைத்தவன், நீரு பதி ப்ரதிய பங்கவ மாடிதவனா – நீருபதியான சமுத்திரராஜனை அடக்கியவன் என்று சொல்லப்பட்டுள்ளது.

இவ்வாறே மற்றொரு சரணத்திலும் "நீரு" என்ற சொல் 4 முறை வந்துள்ளது. மந்தர மலையின் உதவியால் பாற்கடலை கடைந்தவன். அனைத்து உலகிற்கும் நீரைக் கொடுப்பவன். நீரொளகாடுவ நிஜவா – நீரில் மத்ஸ்ய, கூர்மனானவன், நீரேள நாரிய மாடிதவ – நீரு என்றால் சிலை. கல்லை, பெண்ணாக மாற்றியவன் என்று பொருள்.

*"நீரஜோதர நிர்மோஹனனா ஏளு!*
*நீரஜதளதல்லி பாளெவ சின்னிகனா!*
*நீரு பயலு மாடிதவனா!*
*அன்ன நீரோளகித்து ஜகவ*
*ஹொத்தவனா!!"*

நீரஜோதர – கமலத்தை (தாமரையை) அடிவயிற்றில் உடையவன். நீர் மோஹனன் – தாமரையில் பிரகாசிப்பவன். எங்கோ இருந்த நீரை வெளியே கொணர்ந்தவன். அன்னம், நீர் ஆகியவற்றிலிருந்து உலகைக் காப்பாற்றுபவன்.

*"நீரஜபாணி வல்லபனா! தேஜ!*
*நீரன்ன தத்வஹ்ய பிசி கொண்டனவ!*
*நீரே கதிய மாடிதவன!*
*நீரஜாத்ரி திம்மவிஜய விட்டலனா!"*

லஷ்மிதேவிக்கு பதி ஆனவர். நீரில் சத்தத்தைக் கொண்டவன். அனைத்து உயிர்களுக்கும் உணவை விட நீரானது முக்கியமானது ஆகையால் நீரஜாத்ரி, வேங்கடாத்ரி, திம்ம விஜயவிட்டலா என்றார். விஜயதாசர் சாகித்தியத்தில் ஸ்வாமி புஷ்கரணி பற்றி மிகவும் பெருமையாகச் சொல்லப்பட்டு உள்ளது.

தெலுங்கு மூலம்:
திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திரு. வி. வேங்கடரமணா

தொடரும்...

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 63



**இடமிருந்து வலம் :**

3. அயோத்தி .....(3) நதிக்கரையில் உள்ளது
6. துரியோதனன் தலை உருண்டால் தான் என் கூந்தலை முடிப்பேன் என ....(4) சபதம் செய்தாள்.
9. மகாபாரதத்தில் அதீத சக்திகளையும், பல மந்திர சக்திகளையும் கொண்டு இருந்தவன்....(6)
11. அனுமனின் மற்றொரு பெயர்....(3)
15. பெருமாள் கோயிலில் பூஜைகளை நிர்ணயித்த முனிவர்....(5)
16. சகுனியுடன் சூதாட்டம் விளையாடி தோற்றவர்...(4)
20. புனித நதிகளுள் ஒன்று....(4)
22. ஒப்பிலியப்பன் கோயில் ....(2) கிரகத்திற்குரியது
23. இராவணனின் மகன்.....(5)
24. தேவலோகத்தில் இருந்து கருடன் ....(8) கொண்டு வந்தான்.

**வலமிருந்து இடம் :**

3. இராமானுஜரின் தத்துவம்....(5)
4. கருடன் ....(3)மான பார்வை கொண்டவன்
8. சாயாகிரகங்களில் ஒன்று....(2)
7. கருடனின் மனைவி பெயர்....(3)
10. குரு பகவான் துலாம் ராசிக்கு வரும் பொழுது ....(3) நதியில் புஷ்கரம் நடைபெறும்
12. சாரங்கபாணி தன் கையில் வைத்திருக்கும் வில்லின் பெயர்....(5)
25. வேதாந்த தேசிகர் பாடிய ஆண்டாள் துதி.....(5)
26. சந்தனத்துடன் விபூதியும் சேர்த்து தரப்படும் திருமால் கோயில்....வாழ் (5)
27. "அலர்மேல் மங்கை உறைமார்பா" என போற்றியவர்....(6)

**மேலிருந்து கீழ் :**

1. காலையில் பெருமாளுக்கு பாடப்படும் பாசுரம்....(8)
2. தேரழுந்தூர் ஆலயத்தில் இருப்பது.... (3) விமானம்.
5. ஸ்ரீபத்மாவதி தாயார் அருள் புரியும் தலம்....(6)
14. வாமன அவதாரத்தில் தர்ப்பை புல்லாக இருந்தவர்...6)
17. திருமங்கை ஆழ்வார் திருமதில் கைங்கர்யம் செய்த திவ்ய தேசம்....(5)
18. நான்கு தந்தங்களையும் ஏழு துதிக்கைகளையும் கொண்ட யானை.....(5)
19. கிருஷ்ணன் கொன்ற மல்யுத்த வீரன்....(4)
21. மகாபாரதப் போரில் 10-ம் நாளில் அர்ச்சுனனால் வீழ்த்தப்பட்டவர்....(4)

**கீழிருந்து மேல் :**

13. பரதனின் மனைவி பெயர்....(4)
20. வரலட்சுமி விரதத்தை கடைப்பிடித்ததால் ...(4) தன் மனைவியை அடைந்தான்.
24. துரோணாச்சாரியாரின் மகன்....(6)


தொகுப்பு :

**திரு. எஸ். ராஜகுமார், சென்னை,**

**81249 30259**



புதிருக்கு விடை அறிய

32ம் பக்கம்

பார்க்கவும்...

## ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

# 5 த்$_{3}$ருட$_{4}$வ்ரதன்

*தடங்கல்கள் எத்தனை வந்தாலும் எடுத்த கார்யத்தினை முடிக்கும் உறுதி உள்ளவன்.*

**- திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.**



### இராமனின் உறுதிக்கு பரீக்ஷை

சீதையும் இராமனும் தண்டகாரண்யத்தில் நுழைந்தவுடன் அங்கிருந்த ரிஷிகள் அனைவரும் தங்களை அரக்கர்களின் தொல்லையிலிருந்து காக்க வேண்டினர். விரைவில் அதனைச் செய்வதற்கு இராமன் இசைந்தான். ஆனால் மாதங்கள் நகர்ந்தன; இராமனைத் தூண்ட விரும்பிய சீதை, மனதில் ஒரு திட்டத்தோடு இராமா! நான் திருமணத்திற்கு முன் பிறந்த வீட்டில் இருந்தபோது ஜனகர் ஓர் கதை சொன்னார். புண்ய க்ஷேத்ர யாத்திரை புறப்பட்ட ஒரு வீரர் தன் கத்தியை ஒரு ரிஷியிடம் ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி கொடுத்து விட்டுச் சென்றான். முதலில் கத்தியைத் தொடப் பிடிக்காத ரிஷி அதை தள்ளி வைத்தார். சில நாட்களில் அது தொலைந்து விடுமோ என்னும் அச்சத்தில் அருகில் வைத்துக் கொண்டார். இறுதியில் தம் கையிலேயே பிடித்துக் கொண்டார். காலப்போக்கில் பலரைக் குத்தவும் தொடங்கினார். கையில் ஆயுதம் ஏந்தினால் ரிஷியானாலும் கொடியவராகிவிடுவர். இராமா! அதனால் உன் கையில் எப்போதும் பிடித்திருக்கும் வில்லைக் கீழே வைத்து விடு என்றாள். ரிஷிகளுக்குக் கொடுத்த வாக்கை காப்பாற்றாமல் பொம்மைப் போல வில்லைப் பிடித்திருப்பதைக் குத்திக் காட்டுகிறாள் என்பதையுணர்ந்த இராமன், “சீதா! ஒரு நாளும் உன்னை விடமாட்டேன். அப்படியே விட நேர்ந்தாலும் லக்ஷ்மணனை விட மாட்டேன். அவனையே விட நேர்ந்தாலும் கொடுத்த வாக்கையும் எடுத்த உறுதியையும் விடவே மாட்டேன்” என்று கூறினார். இறுதியில் சீதை வைத்த பரீக்ஷையில் தேறி ரிஷிகளைக் காத்தான். நல்ல செயல்களில் ஈடுபட்டு அதில் உறுதியோடும் விட மாட்டேன்” என்று கூறினார்.

நல்ல செயல்களில் ஈடுபட்டு அதில் உறுதி யோடும் இருந்தால், எதிர்ப்படும் தடங்கல்களை இராமனே போக்குவார்.

### இராமனைவிடப் புறா உயர்ந்ததா?

கடற்கரையில் விபீஷணன் இராமனிடம் சரணாகதி செய்ய வந்தான். தீய அரக்கர்களின் குலத்துதித்த அவனை ஏற்கக்கூடாது என்று கூறித் தடுத்தான் சுக்ரீவன்.ஆனால் தஞ்சமடைந்தவர்களைக் காக்கும் உறுதி பூண்ட இராமன் சுக்ரீவனுக்கு வேதத்தில் கூறப்பட்ட ஒரு கதையைக் கூறினான். ஒரு மரத்தில் இருந்த ஆண்–பெண் புறா

ஜோடியில், ஒரு வேடன் பெண் புறாவை அடித்து உண்டான். சில மாதங்கள் கழித்து மழைக்காலத்தில் வேடனுக்கு இரை கிடைக்காமல் குளிரில் நடுங்கிக் கொண்டே ஆண் புறா தனித்திருந்த மரத்தின் கீழ் அமர்ந்தான். தன் வீடு தேடி வந்தவனுக்கு உணவு அளிக்க வேண்டும் என்று உறுதி கொண்ட புறா, வேடன் குளிர் காய்வதற்காக மூட்டியிருந்த தீயில் தானாகவே விழுந்து உயிரினை மாய்த்துக் கொண்டு அவனுக்கு உணவாகியது. ஆணும் பெண்ணுமான புறாக்களே இராமனும் சீதையும், வேடுவனே இராவணன். கதையில் பெண் புறா கொல்லப்பட்டது; ஆனால் இங்கு சீதை சிறைப் பிடிக்கப்பட்டாள்; அவ்வளவே! கதையில் வேடனே திரும்ப வந்தான்; இங்கு இராவணனின் தம்பிதான் வந்திருக்கிறான். அங்கு வேடன் தஞ்சம் என்று சொல்லவில்லை; இங்கு விபீஷணன் சரணமடைந்திருக்கிறான். அங்கு புறா உயிரைக் கொடுத்தது. இங்கு இராமன் உயிர் கொடுக்க வேண்டியதில்லை; ஏற்றுக் கொண்டாலே போதும். மேலும், இராமன் "சுக்ரீவா! இராவணன் சீதையைக் கொன்று விட்டு, தானே திரும்ப என்னிடத்தில் வந்து, சரணம் என்று சொல்லாமல் நிற்க, அவனுக்காக நான் உயிரையே கொடுத்திருந்தாலும், ஒரு புறா செய்ததைத்தான் இராமன் செய்தான் என்றுதான் ஊர் பேசும். ஒரு புறாவை விட நான் தாழ்ந்து போகத் தயாராக இல்லை" என்று கூறி விபீஷணனைக் கைவிடாமல் உறுதியோடு இருந்தான்.

எனவே, நம்மை அண்டி இருக்கும் உற்றார் உறவினருக்கு உரிய நேரத்தில் உதவும் உறுதி வேண்டும் – என்பதைச் சொல்லவும் வேண்டுமா!

**குரங்கின் உறுதி**

சரணமடைந்த விபீஷணனைக் காக்க உறுதி கொண்ட இராமன் சுக்ரீவனுக்கு ஒரு குரங்கின் கதையினைக் கூறினார். ஒரு மனிதனைப் புலி துரத்தியது. தப்பிப்பதற்காக மரத்தில் ஏறி ஒளிந்து கொண்டான் அவன். ஆனால் அவனது போதாத வேளை, மரக்கிளையில் ஒரு மனிதக் குரங்கு இருந்தது. தன்னைக் கண்டு நடுங்கிய மனிதனிடம் குரங்கு "என் வீடு தேடி அடைக்கலமாக வந்திருக்கிறாய். உன்னைக் காப்பாற்ற வேண்டியது என் பொறுப்பு" என்று கூறி சமாதானப் படுத்தியது. எப்படியும் மனிதன் இறங்கி வருவான் – என்று புலி மரத்தின் கீழே காத்திருந்தது. மனிதனும் குரங்கும் மாற்றி மாற்றி உறங்கி –விழித்து ஜாக்ரதையாக இருந்தனர். குரங்கு தூங்கிக் கொண்டு இருந்த போது புலி மனிதனிடம் "ஏ மூடனே! குரங்கை நம்பாதே; அது உன்னை ஏமாற்றி விடும். இப்போது அதைக் கீழே தள்ளி விடு. நான் அதை உண்டுவிட்டு உன்னை விட்டு விடுகிறேன்" என்று ஆசை வார்த்தை காட்டியது.

**கருத்து**



**உடல் வளைந்தால் ஆரோக்யம். உள்ளமும் உரையும் வளையாமல் உறுதியோடு இருந்தால், அதுவே உண்மையான வலிமை!**

நன்றி கெட்ட மனிதன் குரங்கைத் தள்ளிவிட்டான். விழித்த குரங்கு, தான் புலி வாய்க்கருகில் இருப்பதைக் கண்டது. புலி சிரித்துக் கொண்டே "மூடக் குரங்கே! இவனைப் போய் நம்பிக் காப்பாற்றினாயே! இப்போதாவது புரிந்ததா! உன்னை விட்டு விடுகிறேன். போய் அவனைத் தள்ளிவிடு" என்றதும் குரங்கும் சம்மதித்து மரத்தில் ஏறியது. மனிதன் பயத்தில் நடுங்கினான். ஆனால் குரங்கு அவன் அருகில் அமர்ந்து "மனிதா பயப்படாதே. என்னைத் தேடி வந்த உன்னைக் கைவிடமாட்டேன்" என்று உறுதி அளித்தது. இராமன் இக்கதையைக் கூறி "நீயும் குரங்கு இனம்தானே! நம்மை அண்டி வந்த விபீஷணனிடம் தயை காட்டு" என்று தன் உறுதியை வெளிப்படுத்தினான்.

நம் மனம் ஒரு குரங்காக இருந்தாலும், கதையில் வந்த குரங்கின் மனத்தெளிவு நமக்குப் பாடமாக அமைகிறது.

*வளரும்...*



மொழி கற்போம்

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## द्वादशः पाठः பாடம்-12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| पाकः | = சமையல் | कथम् | = எப்படி? | अकरोत् | = செய்வேன் |
| नमस्कारः | = வணக்கம் | एवम् | = இப்படி | अकरोः | = செய்தாய் |
| व्यापारः | = வியாபாரம் | इत्थम् | = இப்படி | अकरवम् | = செய்து விட்டேன் |

### வினாக்கள்

1. ब्राह्मणः स्नानं अकरोत्।
2. अहं पाकं करोमि।
3. त्वं स्नानं अकरोः।
4. बालकाः नमस्कारं कुर्वन्ति।
5. अहं नमस्कारान् अकरवम्।
6. के व्यापारं कुर्वन्ति?
7. त्वम् एकं व्यापारं अकरोः खलु!
8. त्वं कथं स्नानं अकरोः?
9. इत्थं अकरवम्।
10. अहो! यूयं अद्यैव स्नानं कुरुथ किम्?

1. பிராமணர் குளியல் செய்வார் (குளிப்பார்).
2. நான் சமையல் செய்து கொண்டிருக்கிறேன்.
3. நீ குளியல் செய்தாய் (குளித்தாய்).
4. சிறுவர்கள் வணக்கம் செய்துக் கொண்டிருக்கிறார்கள்..
5. நான் வணக்கங்களைச் செய்து விட்டேன்.
6. எவர் (யார்) வியாபாரத்தைச் செய்து கொண்டிருக்கிறார்?
7. நீ ஒரு வியாபாரத்தைச் செய்தாய் அல்லவா!
8. நீ எப்படி குளியல் செய்தாய்? (குளித்தாய்).
9. இப்படிச் செய்தேன்.
10. அடே! நீங்கள் இன்றே (இந்த நாள்) குளியல் செய்து கொண்டிருக்கிறீர்களா என்ன?

### விடைகள்

1. நாங்கள் வணக்கங்களைச் செய்வது இல்லை.
2. நீ வணக்கங்களைச் செய்தாயா?.
3. சிறுவர்கள் அப்படி வணக்கங்களைச் செய்து கொண்டிருக்கிறார்களா என்ன?
4. ஏதோ அவர்கள் சிறுவர்கள் இல்லையா?
5. நீங்கள் சிறுவர்கள் இல்லையா?
6. நாங்கள் சிறுவர்களே.
7. நாளை சமையல் எப்படி?
8. கடவுளே இருக்கிறார்.
9. இன்று இரவு சாப்பாடு எப்படி?
10. நான் காலையிலேயே சாப்பாடு செய்து விட்டேன்.

1. वयं नमस्कारान् न कुर्मः।
2. किं त्वं नमस्कारान् अकरोः?
3. किमर्थं बालाः तथा नमस्कारान् कुर्वन्ति?
4. किं वा ते बालाः एव किल।
5. यूयं बालाः न किम्।
6. वयमपि बालाः एव।
7. श्वः पाकः कथम्?
8. देवः एव अस्ति।
9. अद्य रात्रौ भोजनं कथम्?
10. अहं प्रातः एव भोजनं अकरवम्।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

''வருந்தாதிரு நீ மடநெஞ்சே! நம் மேல் வினைகள் வாரா'' (பெரிய திருமொழி 8.6.6) என்று நமக்கு ஆறுதல் கூறும் ஆழ்வார் திருமங்கையாழ்வார். மடநெஞ்சு என்பதற்கு மையல் கொண்ட மனம், எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் மீது காதல் அல்லது பக்தி கொண்ட மனம், தெளிவுற்ற மனம், சாதுவான நெஞ்சம் என்று பெரியோர் பொருள் கூறு கின்றனர். ''தொண்டீர் உய்யும் வகை கண்டேன்'' என்று சந்தோஷத்துடன் இப்பதிகத்தைத் தொடங்கும் அழகே அழகு. பகவத் பாகவத கைங்கர்யத்தில் ருசி உடையவர்கள் உஜ்ஜீவிக்கும்/உய்யும் வழியை அறிந்து கொண்டவர்கள். பகவத் பாகவத தொண்டு செய்தால் நம்மை வந்தடையும் துயரங்களும் துன்பங்களும் இடர்களும் பகலவனைக் கண்ட பனி போல் அகன்று ஒழிந்து விடும் என்கிறார். நம்மை நல்வழிப்படுத்துகிறார். ஊக்குவிக்கிறார். ''மாலாய் மனமே! அருந்துயரில் வருந்தாது இரு நீ'' என்று மீண்டும் உபதேசம் (பெரிய திருமொழி 8.6.8).

துயர் சூழ்ந்த, துன்பம் சூழ்ந்த, இடர் சூழ்ந்த நாங்கள் எப்படித் துயரில்லாமல் வாழ்வோம்? இது நடைமுறையில் சாத்தியமா? என்று கேட்டால், இதோ பதில் கூறுகிறார். தாய் வடிவில் விஷம் கொண்டு வந்து பகவானையே மாய்க்க நினைத்து பேயுருவில் வந்த பூதனையை மாய்த்தவன்; சகடாசுரனை, கள்ளச் சகடனை கலக்கழியக் காலோச்சி மாய்த்தவன்; மருத மரங்கள் வடிவில் வந்த அசுரர்களை மாய்த்தவன்; குதிரை, கழுதை வடிவில் வந்த தீய எண்ணம் கொண்ட பொல்லா அரக்கர்களை அழித்தவன். மல்லர்களை வென்றவன். மதம் கொண்ட குவலயாபீடம் என்ற யானையை யும் மாய்த்து தர்மத்தை நிலை நாட்டிய மா மாயன் கண்ணபிரான் எழுந்தருளிய திவ்ய தேசம் திருக்கண்ணபுரம் சென்று கருடன் மீதேறிக் காட்சி தரும் நீல மேகப் பெருமாளின் திருவடிகளில் சரணடைந் தால் தீவினைகள் அகலும் என்று உறுதி யளிக்கிறார். திருக்கண்ணபுரம் பதிகம் (பெரிய திருமொழி 8.1) தொடக்கத்திலேயே பகவானை ''ஒப்பிலா என்னப்பா'' என்றழைக் கிறார். அவன் வடிவழகோ எண்ணில் ''மரக தமோ! மழைமுகிலோ!'' என்று வர்ணிக்கிறார். திருக்கல்யாணகுணங்களோ எண்ணில் ''நீரார் மழைமுகிலே நீள் வரையே ஒக்கும் மால்'' என்கின்றார். இதனோடு பல திவ்ய தேசங் களையும் கூறும் ஆழ்வார், திருவேங்கடத்தை அடையுமாறு கூறுகின்றார்.

''பொங்கு நீர்ச் செங்கயல் திளைக்கும்
சுனைத் திருவேங்கடம் அடைநெஞ்சமே!''
''நாள் தோறும் தெள்ளியார் வணங்கும்
மலைத் திருவேங்கடம் அடை நெஞ்சமே!''
''பொழில் சூழ் தரும் உலகுக்கெல்லாம்
தேசமாய்த்
திகழும் மலைத் திருவேங்கடம் அடை
நெஞ்சமே!''

# துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின்

- திரு. எஸ். சுதர்ஸனம்,
நங்கைநல்லூர், 99627 88065.



என்று உபதேசம் செய்கிறார். பாபங்களைப் போக்கும் புனித நீர்ச் சுனைகள் உள்ள திருவேங்கடம் சென்று திருவேங்கடத்தானை, திருவேங்கடாசலபதியை அடைந்து வணங்கி "வருந்தாதிரு மட நெஞ்சே" என்கிறார்.

நித்ய சூரிகள் தொழும் "உயர்வற உயர் நலம் உடையவனான்" ஆயிற்றே. அவன் "துயரறு சுடரடிகளைத்" தொழ திருவேங்கடம் அடை நெஞ்சேமே என்கிறார். இவனே "திண் கைம் மா துயர் தீர்த்தவன்" – கஜேந்திரனின் துயர் தீர்த்தவன். "ஏத்துவார் தன் மனத்துள்ளான்" துதிப்பவர்கள் மனத்தில் அகலாது அந்தர்யாமியாய் அமர்ந்து பக்தர்களைக் காப்பாற்றுபவன். திருமலை வாழும் ஏழுமலை யானே நமக்குத் தாய் தந்தை உறவினன் சுற்றத்தவன். "நாயேன் வந்த டைந்தேன். நல்கி என்னை ஆட் கொண்டருளே" என்று திருவேங்கடத் தானைச் சரணடையும் வழியையும் நமக்குக் கற்றுக் கொடுத்தவர் திருமங்கை ஆழ்வார் (பெரிய திருமொழி 1.9).

பிறவி தோறும் துன்புறும் அடியேனை ஆட்கொண்டு அடைக்கலம் தா என்று பகவான் முன் நின்று கேட்க வேண்டுமாம். "திருவேங்கடவா! அலைந்தேன், வந்தடைந்தேன், அடியேனை ஆட்கொண்டருளே" என்று பிரார்த்திக்க வேண்டுமாம். அப்பா வந்தடைந்தேன். அண்ணா வந்தடைந்தேன். அரியே வந்தடைந்தேன். ஆற்றேன் (ஆற்றாமை – பிறவித் துயரைப் பொறுக்க முடியாமை) அற்றேன் (துணை யில்லாதவன்) வந்தடைந்தேன். அடியேனை ஆட்கொண்டருள் என்று பிரார்த்தித்தால் வருத்தம் தீர்ந்து வாழலாம் என்பது அறிவுரை. "அடியேன் இடரைக் களையாயே" என்று கதற வேண்டு மாம். திருத்துழாய் முடியானே! என்னிடம் கருணை கொள். எனக்கருள் செய். அடியேனைக் காப்பாற்ற வா என்று கதற வேண்டுமாம். ஆதி சேஷனைப் படுக்கையாகக் கொண்டு பக்தர்களைக் காப்பாற்ற யோக நித்திரை செய்பவனே, பகவானே! உன் திருவுள்ளத்தில் அடியேனை நினை. அருள் புரி என்று கேட்க வேண்டுமாம்.

"சேன் ஆர் திருவேங்கடமாமலை மேய, கோள் நாகணையாய் குறிக்கொள் எனை நீயே" என்றும் திருவேங்கடமுடையானே! உன் திருவடிகளையன்றி மற்றொன்றையும் நான் அறியாதவன். மறந்தும் புறம் தொழா மாந்தன். நான் இனிமேல் என்றும் எப்போதும் எவ்விடத் தும் எந்நிலையிலும் உன்னை ஒரு பொழுதும் விட்டுப் பிரியவே மாட்டேன் என்று உறுதி கூற வேண்டுமாம். "எந்தாய் இனியான் உனை என்றும் விடேனே" என்று உபதேசம் செய்கிறார்.

வாடினார், வருந்தினார், காம வசப்பட்டார். பெருந்துயர் இடும்பையில் வீழ்ந்து அல்லல் பட்டார். ஐயோ! வாழ்க்கையை வீணடிக்கிறாயே என்று பயந்தார். உய்ய வேண்டும் என்ற நல்லுணர்வைப் பெற்றார். பகவான் அனுக்ரகம். நாராயண







நாம சங்கீர்த்தனம் செய்தார். உய்ய வழி தேடிக் கொண்டார். இனிமேல் நள்ளிருளாகட்டுமே, பகலாயிருக்கட்டுமே, நாராயணா என்னும் ஜபம் தான். சுயநலம் இல்லாத ஆழ்வார், கூடியிருந்து குளிர்ந்து வாழ ஆசைப்பட்டவராய் ''நற்பொருள் காண்மின் பாடி நீர் உய்ம்மின்'' என்று நமக்கும் உபதேசம் செய்கிறார். பகவந் நாமமே நல்துணை. உறுதியான இறுதியான துணை.

உறங்கும் போதும் நாராயண ஜபம். துயர் வந்தாலும் வராவிட்டாலும் நாராயண ஜபம். நம் வினைகள் வேரறப் பாய்ந்து அழிக்கும். நாம் பகவான் திருவடிகளைச் சென்றடையலாம். (பெரிய திருமொழி 1.1.10)

''துஞ்சும் போது அழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா என்னும் நாமம்''

உடல் நிலை நன்றாக இருக்கும் போதே, புலன்களைக் காவலில் வைத்து நாசமான பாசம் விட்டு, பகவான் ஒருவனே கதி என்றும் மஹா விச்வாசத்தோடு திவ்ய தேசங்கள் சென்று, பகவானின் வடிவழகு, கல்யாண குணங்களில் ஈடுபட்டு, தல புராண மகிமை கேட்டுப் பொழுது போக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். (பெரிய திருமொழி 1.9.7)

''தெரியேன் பாலகனாய்ப் பல தீமைகள் செய்து விட்டேன்

பெரியேனாயின பின் பிறர்க்கே உழைத்து ஏழையானேன்'' என்று மனம் வருந்தி, மனம் திருந்தி, ''அடியேனை ஆட் கொண்டருளே'', ''அடியேனுக்கு அருள் புரியாயே'', ''அடியேன் இடரைக் களையாயே'', ''என் வல்வினைத் தீர்த்தருளாயே'' என்று சொல்லி எம்பெருமான் திருவடிகளைப் பற்றிக் கொண்டால் நாம் உய்யலாம் என்று பாடுகிறார்.

கடினமான யாகம் செய்ய வேண்டாம். நிறைய தானம் செய்வது அவசியமில்லை. உடம்பை வாட்டித் தபஸ் செய்தும், பட்டினி கிடந்தும் மட்டுமே பகவானின் கருணையைப் பெற முடியும் என்பது தவறு என்கிறார் திருமங்கையாழ்வார் (பெரிய திருமொழி 3.2.1).

''ஊன் வாட உண்ணாது உயிர் காவலிட்டு
உடலில் பிரியாப் புலனைந்தும் நொந்து
தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா''

என்றும்

''தீயோடு நின்று தவம் செய்ய வேண்டா''

என்றும் பாடுகிறார். பகவந்நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டே, திருமாமலர் மங்கையை தன் திருமார்பினில் எப்போதும் தங்க வைத்திருக்கும் ஸ்ரீயப்பதியை, தேவாதி தேவனை, பேரருளாளனை, ஸ்ரீமந் நாராயணனைத் தஞ்சமடைந்து உய்யலாம். ''வருந்தாதிரு நீ மடநெஞ்சே'' என்பதே திருமங்கை ஆழ்வாரின் உபதேசம்.

ஐம்புலன்களையும் வெல்ல வேண்டும் என்று இவர் அன்று செய்த உபதேசம் இன்றும் ஏற்கத் தக்கது. ஒரு புலன் செய்யும் தொந்தரவே மிகப் பெரிது. அதிலிருந்து தப்பிப்பதே கடினம். ஆனால் ஐம்புலன்களும் ஒரு கூட்டணி அமைத்து என்னுள் புகுந்து என்னைத் தொடர்ந்து அலைக் கழிக் கின்றனவே! பகவானே ஐம்புலன்களுக்கும் தரும் தொல்லையிலிருந்து என்னைக் காப்பாற்று என்று, ஐம்புலன்களுக்கும் அஞ்சி, பகவான் திருவடிகளை அடைகிறார். நம்மையும் அடைந்து உய்யச் சொல்கிறார்(பெரிய திருமொழி 7.7). ஐம்புலன்களும் வஞ்சனையாக இவர் உடம்பில் புகுந்து குடியேறி யதாம். அவரை அழிக்கத் துணிகின்றதாம். எப்படி? சிற்றின்பங்களில் ஈடுபடச் செய்து அழிக்கின்றதாம்.

திருவேங்கடத்தின் மஹிமையை ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன் பாடிக் கேட்க வேண்டும். (அதிகார ஸங்க்ரஹம் 43)

''கண்ணன் அடிஇணை எமக்குக் காட்டும் வெற்பு
கடுவினையர் இருவினையும் கடியும் வெற்பு
திண்ணம் இது வீடென்னத் திகழும் வெற்பு
தெளிந்த பெரும் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு
புண்ணியத்தின் புகல் இதென்னப் புகழும் வெற்பு
பொன்னுலகில் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கட வெற்பென விளங்கும் வேதவெற்பு''

ஜோதிட சாஸ்திரம்

# மானுடவியல் சார்ந்த கிரக சாஸ்திரம்



முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை,
94443 92595.

### அக்ஷராப்யாஸம் - கல்வி புகட்டுதல்

கல்வியின் சிறப்பைக் கூறுமிடத்து “எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்” என்பர். 5வது வருடத்தில், 5வது மாதத்தில், 5வது நாளில் செய்வது உத்தமம் எனப் பெரியோர்கள் கூறுவார்கள். அஸ்வினி, ரோகினி, திருவாதிரை, புனர்வசு, பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள், துவிதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி ஆகிய திதிகள், மிதுனம், கடகம், மகரம், மீனம் ஆகிய லக்னங்கள் ஏற்றது. 4, 8 ஆகிய இடங்களில் கிரகங்கள் இருக்கக்கூடாது. லக்னத்தையும் 4ஆம் இடத்தையும் சுபகோள்கள் பார்த்தல் உத்தமம்.



### நிச்சயதார்த்தம் அல்லது நிச்சயதாம்பூலம்

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி திதிகளிலும், ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளிலும், அஸ்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களிலும் ஏற்றது. கேந்திர கோணங்களில் பாவக்கோள்கள் இல்லாத லக்னமாக அமைய வேண்டும்.



### திருமாங்கல்யம் செய்ய

அஸ்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், உத்திராடம், அஸ்தம், சுவாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், ரேவதி ஆகிய நட்சத்திரங்களிலும், துவிதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி மற்றும்





## பஞ்சாங்கம் சொல்லும் சில குறிப்புகள்



1. விநாயகரை துளசியால் அர்ச்சனை செய்யக் கூடாது. (விநாயக சதுர்த்தியன்று மட்டும் ஒரு தளம் போடலாம்.)
2. பரமசிவனுக்குத் தாழம்பூ உதவாது. தும்பை, பில்வம், கொன்றை முதலியன விசேஷம். ஊமத்தை, வெள்ளெருக்கு ஆகியனவற்றாலும் அர்ச்சிக்கலாம்.
3. விஷ்ணுவை அக்ஷதையால் அர்ச்சிக்கக் கூடாது.
4. அம்பிகைக்கு அருகம்புல் உகந்ததல்ல.
5. சம்பக மொக்குத் தவிர வேறு மலர்களின் மொட்டுகள் பூஜைக்கு உகந்தவை அல்ல.
6. மலர்களை கிள்ளி பூஜிக்கக்கூடாது. வில்வம், துளசியைத் தளமாகவே அர்ச்சிக்க வேண்டும்.
7. முல்லை, கிளுவை, நொச்சி, வில்வம், விளா – இவை பஞ்ச வில்வம் எனப்படும். இவை சிவ பூஜைக்கு உரியவை.
8. துளசி, முகிழ் (மகிழம்), செண்பகம், தாமரை, வில்வம், செங்கழுநீர், மருக்கொழுந்து, மருதாணி, தர்பம், அருகு, நாயுருவி, விஷ்ணுக்ராதி, நெல்லி ஆகியவற்றின் (இலை) பத்ரங்கள் பூஜைக்கு உகந்தவை.
9. பூஜைக்குரிய பழங்கள்: நாகப்பழம், மாதுளை, எலுமிச்சை, புளியம்பழம், கொய்யா, வாழை, நெல்லி, இலந்தை, மாம்பழம், பலாப்பழம்.
10. திருவிழாக்காலத்திலும், வீதி வலம் வரும் போதும், பரிவார தேவதைகளின் அலங்காரத்திலும், மற்றைய நாட்களில் உபயோகிக்கத் தகாதென விலக்கப்பட்ட மலர்களை உபயோகிக்கலாம்.
11. அபிஷேகம், ஆடை அணிவிப்பது, சந்தன அலங்காரம் நைவேத்யம் முதலிய முக்கிய வழிபாட்டின் போது கட்டாயமாகத் திரை போட வேண்டும். திரை போட்டிருக்கும் காலத்தில் இறை உருவை காணலாகாது.
12. குடுமியுள்ள தேங்காயைச் சமமாக உடைத்து, குடுமியை நீக்கிவிட்டு நிவேதனம் செய்ய வேண்டும்.
13. பெருவிரலும், மோதிரவிரலும் சேர்த்துத் திருநீறு அளிக்க வேண்டும். மற்ற விரல்களைச் சேர்க்கக் கூடாது.
14. கோயில்களில், அர்ச்சகர்களிடம் இருந்து தான் திருநீறு போன்ற பிரசாதங்களைப் பெற வேண்டும். தானாக எடுத்துக் கொள்ளக் கூடாது.
15. பூஜையின் துவக்கத்திலும், கணபதி பூஜையின் போதும் தூபம் தீபம் முடியும் வரையிலும் பலிபோடும் போதும் கை மணியை அடிக்க வேண்டும். மணியின் சப்தமில்லாவிடில் அச்செயல்கள் பயனைத் தரமாட்டாது.
16. ஒன்று, மூன்று, ஐந்து, ஒன்பது, பதினொன்று அடுக்குகள் கொண்ட தீபத்துக்கு மஹாதீபம் அல்லது மஹாநீராஜனம் என்று பெயர்.

திரயோதசி திதிகளிலும், ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மீனம் லக்னங்கள் ஏற்றது. இரண்டாமிடம் சுத்தமான லக்னமும் ஏற்றது.

**கர்ப்பமான பெண்ணை தாய் வீட்டுக்கு அழைத்து வரல்**

துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, திரயோதசி திதிகளிலும், திங்கள், புதன், வியாழன், சனிக்கிழமைகள் பொதுவான சுப நட்சத்திரங்கள் பெண்ணுக்கு தாராபலமுள்ள

### இந்துக்களின் தினசரி கடமைகள்

1. தினமும் சூரியன் உதிப்பதற்கு முன் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவும்.
2. காலையில் எழுந்தவுடனும், நீராடிய பின்னும், உணவு கொள்ளும் போதும், இஷ்ட தெய்வத்தை சிந்திக்கவும்.
3. நெற்றியில் இந்து சமயச் சின்னம் (திருநீறு, குங்குமம், சந்தனம், திருநாமம் – ஏதேனும்) அணியாமல் இருக்கக் கூடாது.
4. இறைவழிபாட்டுக்கு என தனியே இடம் ஒதுக்கித் தவறாது வழிபாடு செய்யவும். காலை – மாலையில் விளக்கேற்றி நறுமணப் புகை பரவச் செய்யவும்.
5. சமய நூல்களை படித்தல் வேண்டும்.
6. படுக்கும்போது தெய்வத்தின் நினைவோடு படுக்க வேண்டும்.



நாளில், பிரயாணத்துக்கு உகந்த நாட்களில் வாரசூலை, சுக்கிரன் எதிரில் இல்லாத நாட்கள் , ஏழாவது அல்லது எட்டாவது மாதத்தில் அழைத்து வர வேண்டும்.

### குழந்தை பெற்ற பின்னர் மாமியார் வீட்டுக்கு அனுப்புதல்

குழந்தைக்கு 3,5,7,9 அல்லது 11வது மாதத்தில் அனுப்பலாம். 3வது அல்லது 5வது மாதம் அனுப்புதல் சிறந்தது. துவிதியை, திருதியை, சதுர்த்தி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி, திதிகள், அஸ்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரங்களிலும் ஏற்றது. குழந்தை–தாய் இருவருக்கும் தாரா பலமுள்ள நாட்கள் ஏற்றன. ஆனந்தாதி யோகப்படி அல்ல. நாள் ஆகியவற்றை பார்க்க வேண்டும்.

### கிணறு வெட்டும் திசையின் பலன்

வீட்டிற்கு கிழக்கு – விபத்து, தென்கிழக்கு – புத்திர நாசம், தெற்கு – மனைவிக்குப் பீடை, கெண்டம், தென்மேற்கு – எஜமானனுக்கு ஆபத்து, மேற்கு – உடல் ஆரோக்கியம், வடமேற்கு – ஆயுத பயம், வடக்கு – செல்வம் சேரும். வடகிழக்கு – சுபீட்சமான வாழ்வு, நல்ல நாட்கள்.

### பொதுவான கடமைகள்

1. வாரத்துக்கு ஒரு நாளேனும், குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.
2. தியானம் பழக வேண்டும்.
3. பஜனை, சத்சங்கம், கதாகாலட்சேபம், சமயப் பேருரை நிகழ்ச்சிகளுக்குச் செல்ல வேண்டும்.
4. வீட்டில் நாம சங்கீர்த்தனம், சிறப்பு வழிபாடு போன்றவற்றை, அண்டை அயலார்களின் ஒத்துழைப்புடன் நிகழ்த்த வேண்டும்.
5. வீட்டில் ஓம் படம் மாட்டி வைக்கவும்.
6. புராண, இதிகாச, தேவார, திவ்ய பிரபந்த நூல்கள் கட்டாயமாக ஒவ்வொரு இந்துவின் வீட்டிலும் இருக்க வேண்டும்.
7. இந்து பண்டிகைகளை, வெறும் விழாக்களாகக் கருதாமல் தெய்வங்களோடு ஒட்டுறவு கொள்ளும் தருணங்களாக மதித்துக் கொண்டாட வேண்டும்.
8. அனாதை இல்லம், முதியோர் இல்லம், கண் பார்வையற்றோர், செவிகேளாதோர் சேவை இல்லங்களுடன் தொடர்பு கொண்டு, இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.
9. வீட்டில் தரக்குறைவான சினிமாப் பாடல்கள் ஒலிக்க அனுமதிக்கக் கூடாது. பாலுணர்வு, வன்முறை, பழிக்குப்பழி, பேராசை ஆகிய தீய உணர்வுகளைப் பாராட்டும் புதினங்கள் புத்தகங்களை வாங்கக்கூடாது.

தொடரும்...





11-10-2021 அன்று திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தில் கருட சேவையை முன்னிட்டு ஆ.மா. அரசு சார்பில் பட்டு வஸ்த்திரங்களை சமர்ப்பிக்கும் மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன் மோகன் ரெட்டி அவர்களை ஆசிர்வதிக்கும் தி.தி.தே. ஜீயர் ஸ்வாமிகள்





11-10-2021 அன்று திருப்பதி அலிபிரி அருகில் ஸ்ரீவேங்கடேஸ்வரா ஸப்த கோ பிரதக்ஷண மந்திர வளாகத்தை துவக்கி வைத்து பசுவிற்கு ஆகாரத்தை அளித்து அதன் பின்னர் வளாகத்தை பார்வையிட்ட மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன் மோகன் ரெட்டி அவர்கள்.







11-10-2021 அன்று திருப்பதி அலிபிரி மார்க மேற்கூறை சீரமைக்கப்பட்ட நடைப்பாதையை துவக்கி வைத்து, 12-10-2021 அன்று திருமலை ஆலயத்தில் துலாபார சேவையில் பங்கு கொண்ட மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன் மோகன் ரெட்டி அவர்கள். ஆ.மா. முதல்வரை ஆசிர்வதிக்கும் அர்ச்சக ஸ்வாமிகள்

## திருமலை ஆலயத்தில் 07-10-2021 முதல் 15-10-2021 வரை ஏகாந்தமாக நடைபெற்ற



சேனாதிபதி உத்ஸவம்



துவஜாரோஹணம்



பெரிய சேஷ வாகனம்



சிம்ம வாகனம்



கல்ப விருக்ஷ வாகனம்



சர்வ பூபால வாகனம்

# திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்



கருட வாகனம்



அனுமத்வாகனம்



யானை வாகனம்



சூரியப்பிரபை வாகனம்



சந்திரப்பிரபை வாகனம்



சக்கர ஸ்நானம்



11-10-2021 அன்று திருமலை ஆலயத்தில் 2022-ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி, நாட்குறிப்பேடுகளை வெளியிடும் மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன் மோகன்ரெட்டி அவர்கள். இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் & தி.தி.தே உயர் அதிகாரிகள் பங்கு கொண்டனர்



11-10-2021 அன்று திருப்பதி பர்ட் மருத்துவமனை வளாகத்தில் ஸ்ரீபத்மாவதி சிறார் இருதய சிகிச்சை மருத்துவமனையை துவக்கி வைக்கும் மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன் மோகன் ரெட்டி அவர்கள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள்.





12-10-2021 அன்று திருமலையில் எஸ்.வி.பி.சி. கன்னட, இந்தி சேனல்களை துவக்கி வைக்கும் மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன் மோகன் ரெட்டி அவர்கள். இந்நிகழ்ச்சியில் மந்திராலயம் ஸ்ரீராகவேந்திர பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சுபதேந்திர தீர்த்த ஸ்வாமிகள், அமைச்சர்கள், தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கு கொண்டனர்



12-10-2021 அன்று திருமலை ஆலயத்தில் புதிதாக பூந்தி தயாரிக்கும் மடைப்பள்ளியை துவக்கி வைக்கும் மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன் மோகன் ரெட்டி அவர்கள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட அமைச்சர்கள், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள்



25-09-2021 அன்று தி.தி.தே. புதிய இணைச்செயலாட்சித்தலைவராக(திருப்பதி) பதவி பொறுப்பினை ஏற்ற திரு. வி. வீரபிரஹமம் ஐ.ஏ.எஸ்.

# முனிவாஹனரும் அணியரங்கனும்

**திருமதி பட்டம்மாள் ஜெகன்நாதன், அம்பத்தூர், 9952929685**

"**ஊ**ரெனப்படுவது உறையூர்" எனப் போற்றிப் புகழும் உறையூரில், இசைக் கருவிகள் தயாரிக்கும் பாணர் குலத்தில், துன்மதி ஆண்டு கார்த்திகை மாதம் உரோகிணி நட்சத்திரத்தில் புதன் கிழமையன்று திருமாலின் ஸ்ரீவத்ஸத்தின் அம்சராய் திருப்பாணாழ்வார் அவதரித்தருளினார். அரங்கனின் மீது அப்பழுக்கற்ற பக்தி உடையவர். அரங்கனின் நியமப்படி ரங்கநாச்சியாரின் அருளால் அரங்கனின் பட்டாச்சாரியார் லோகசாரங்க மகாமுனிவர் தமது தோளில் பாணரை சுமந்தபடி வந்து, அழகிய மணவாளன் திருமண்டபத்தினுள்ளே புக, பெரிய பெருமாளும் நித்திய தரித்திரனுக்கு நிதி காட்டுவாரைப் போல் தன்னுடைய திவ்ய மங்கள விக்ரகத்தை காட்டிக் கொடுக்க, ஆழ்வாரும் கண்களாரக் கண்டு பாதாதி கேசாந்தம் திருவடி முதல் திருமுடி வரை அனுபவித்து, அவ்வனுபவம் உள்ளடங்காமல் "அமலனாதிப் பிரான்" என்கிற திவ்யப் பிரபந்தத்தில் பத்து பாசுரங்களாலே தம் அனுபவத்தை வெளியிட்டருளி திருமணத்தூணுக்குள்ளே உகப்போடு நிற்க, பெரிய பெருமாளும் பேர் சூடுமவர்கள் மண்பற்றுக் கழற்றாதாற் போல ஆழ்வாரைத் திருமேனியோடு அங்கீகரித்தருள, ஆழ்வாரும் அனைவரும் காணும்படி அணி அரங்கன் திருவடிகளிலே மறைந்தருளினார்.



கங்கையிற் புனிதமாய காவிரியின் கரையில், காவேரி கொள்ளிடம் நதியின் இடையில் அமைந்துள்ளது அரங்கன் கோயில். இனி இத்திவ்ய பிரபந்தத்தின் பொருளைப் பார்ப்போம்.

*"சீரிய நான்மறைச் செம்பொருள்*
*செந்தமிழாலித்த பாரியலும் புகழ்ப்பாண்*
*பெருமாள்"*

–இராமாநுஜர் நூற்றந்தாதி–11

என அமுதனார் வாக்கின்படி அரங்கனின் மேனியழகை, வேதாந்த சாரமாக வர்ணித்தார். பாடிய பத்து பாசுரங்களும் ரகசியத்ரய அர்த்தத்தையும், அர்த்தபஞ்சக சாரார்த்தத்தையும் சொல்வதால் இப்பிரபந்தத்திற்கு அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும், வேதாந்த தேசிகரும் பெரிய வாச்சான்பிள்ளையும் அதி அற்புதமான உரைகளை அருளிச் செய்திருக்கிறார்கள். முதல் மூன்று பாசுரங்களில் அ உ ம என்ற முதலெழுத்துக்கள் வேதசாரமாக ஓங்காரத்தில் அடங்கியுள்ள எழுத்துக்களாய் இருப்பதிலிருந்து வேதாந்த சாரம் பிரபந்தம் என்பது வெளிப்படையாகத் தெரியும்.

பிரமேய சாரம் எம்பெருமானுடைய திருவடியே என்பதை 5, 6, 7 ஆவது பாசுரங்களின் முதல் ப து கை எழுத்துகளால் உணர்த்துகின்றார். நடுவில் உள்ள நான்காவது பாசுரத்தின் முதல் எழுத்தான "ச" பிரமான சாரத்தையும் பிரமேண சாரத்தையும் இணைத்து வழங்குகின்றது. பத்தாவது பாசுரமான *"அரங்கனை கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"* என்று உருக்கமாகப் பாட, ஒளிமயமாகிய அவர்

திருவடிக் கீழே நிரந்தர சேவை பண்ணிக் கொண்டிருக்கும் செல்வத்தை உடையவரான பாணருடைய விரும்பத் தக்க திருவடிகளை வாழ்த்தி துதிப்போம். செந்தமிழ் பாடலில் வல்லவர் திருப்பாணாழ்வார் “இசைகாரர்” என்று நம்மாழ்வாரால் கொண்டாடப் பட்ட மஹா வைபவத்தை உடையவர்.

திருப்பாணாழ்வார் திருவடிகளை “சரணாம் பதுமம்”



## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 63க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | தி | 2 க | ணா | ர | 3 ச | ர | யு | லா | சா | 4 வி | 5 தி |
| ரு | | ரு | 6 தி | ரெள | ப | தி | | | ரா | த் | 7 ரு |
| ப் | வி | ட | கு | 8 ரா | 9 க | டோ | த் | க | ஜ | ன் | ச் |
| ப | ட | ரி | வி | 10 கா | ர் | வா | ழ் | மா | ம் | 27 ந | சா |
| ல் | ண் | ன் | 11 மா | ரு | தி | ம் | க | ங் | ர | 12 சா | னு |
| லா | 13 மா | த | 14 சு | | | | 15 வை | கா | ன | ச | ர் |
| ண் | தா | ந் | 16 த | ரு | ம | ர் | | 17 ஸ்ரீ | | 18 ஜ | 19 சா |
| டு | த் | 20 ந | ர் | ம | தை | 21 பீ | | ர | | ரா | னு |
| | வ | | 22 ச | னி | | ஷ் | | ங் | | வ | ர |
| | ஸ் | | ன | | | ம | 23 மே | க | நா | த | ன் |
| | 24 அ | மி | ர் | த | வீ | ர் | ய | ம் | | ம் | |
| தி | து | ஸ் | தா | 25 கோ | | | ல | ல் | வ | ரு | 26 தி |

ஊன் உடம்பு இறைவனிடத்தில் அப்படியே புகுந்து ஐக்கியமானது.நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் இவர் பாடியுள்ள பத்து பாசுரங்களும் நல்மாணிக்கங்களாகத் திகழ்கிறது. பத்து பாசுரங்களில் பகவானின் நிலைமையினையும் ஜீவாத்மாவின் தன்மையினையும் சரணாகதி தத்துவத்தின் மேன்மையினையும் விளக்கிக் கூறி ஜீவாத்மா பரமாத்மாவிற்கு அடிமை என்ற தத்துவத்தையும், மேலும் பகவானின் திருவடியை எப்படி அடைய வேண்டும் என்ற திவ்ய மந்திரத்தின் விபரத்தையும் கூறி விட்டு பிராட்டியுடன் சேர்ந்து பெருமானை சரணடைவதே சிறந்தது என்று கூறினார்.

இப்பாசுரத்தில் பெரிய நம்பிகளும் திருமலை நம்பிகளும் தனியன்கள் அருளிச் செய்தார்கள். மற்ற ஆழ்வார்கள் போல் இவர் தன் பாசுரத்தில் ஊரையும் பெயரையும் குறிப்பிடவில்லை. ***“உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன்”*** என்கிற மனோ பாவம் அவருடையது. அவருடைய கண்ணும் கருத்தும் அரங்கனிடமே அவன் அழகிலேயே ஈடுபட்டன. அவர் தன்னை மறந்தார். இத்தனை காலமாக கோயிலுக்கு உள்ளே வந்து தரிசிக்க முடியாமல் இருந்ததால் இன்று அரங்கநாதனை மிக அருகிலிருந்து தரிசித்த ஆனந்தக் களிப்பில் தன்னையே இழந்தார். தன் நாமமும் கெட்டார் தலைப்பட்டார்.

“அரங்கநாதா” உன்னை கண்ணாரக் கண்ட பின், உன்னை கண்ட கண்கள் வேறு எதையும் பார்க்க விரும்புமா?” என்று கேட்டவுடன், அரங்கன் திருப்பாணரை தன் மேனியோடு சேர்த்துக் கொண்டார். காந்தம் இரும்பை இழுப்பது போல, காய்ந்த இரும்பில் விழும் நீர் போல “ஆழ்வார் அரங்கனோடு ஐக்கியம் ஆனார். அமுதமே கிடைத்த பின், பால் எதற்கு?” வீணையும் கையுமாய்ப் பெரிய பெருமாள்



# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ஸ்ரீசைலபூர்ணோப்யத$_2$ பூ$_4$தபுர்யாமாக$_3$ம்ய*
*வீக்ஷ்யாத்$_3$பு$_4$தப$_4$ாகி$_3$நேயம் ।*
*சகார ரக்ஷார்த்த$_2$ரத$_2$ாங்க$_3$சங்க$_2$சிஹ்நம் ச*
*ராமாநுஜநாமகம் ச ॥* (8)



**திருமலை நம்பியும் ஸ்ரீபெரும்பூதூருக்கு எழுந்தருளி, அற்புதனான மருமகனைக் கடாக்ஷித்து, அவரது ரக்ஷையின் பொருட்டு, (புஷ்பத்தால்) திருவிலச்சினை ஸாதித்து, இராமாநுஜன் என்னும் திருநாமத்தையும் இட்டருளினார்.**

**–“ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது**

என்பர் அமுதனார். அதாவது அழகான திருவடிகளாகிற தாமரை பூ. இத்தகைய பாதத்தை தன் சென்னிக்கு அலங்காரமாகக் கொண்டவர் இராமாநுஜர் என்பர். எனவே நாமும் திருப்பாணாழ்வார் திருவடிகளுக்கு பல்லாண்டு பாடி வாழ்த்துவோம்.

அவதிப்படும் உயிர்கள் தங்களை காப்பதற்கு யாரும் இல்லை என்று நினைத்து விடாதபடி, அவர்களை காப்பதற்கென்றே இந்த பொன்னி சூழ் திருவரங்கத்தில் கிடையாய் கிடக்கிறான் என்பதால் “அணி அரங்கன்” என்று அழைக்கிறார். அது மட்டும் அல்ல அமுதம் போன்றவன் என்கிறார். அமுதம் மிக உயர்வான பொருள்.

எல்லா திவ்ய தேசங்களையும் எல்லா அவதார குணங்களையும் இணைத்து சேவித்த திருப்தியில் தம்மை மறந்து அற்புதமாக திருப்பாணாழ்வார் பாடிய பத்து பாசுரங்கள் நம் பிறவி நோயைத் தீர்க்கும்.

ஆழ்வார் காட்டும் நெறி பகவானை உணரவும் பக்தி செலுத்தவும் பிறந்த குலம் தடையாக இருக்க முடியாது. சுயநலமற்ற பக்தனைத் தானே தேடி வந்து தன்னை உணர வைக்கிறான் பகவான். நாமும் திருப்பாணாழ்வார் திருவடி பற்றி அணியரங்கன் திருவடி அடைவோம்.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.



## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம் -29

*ப்ராணாயாமம் ப்ரத்யாஹாரம் நித்யா*
*நித்ய விவேக விசாரம் ।*
*ஜாப்ய ஸமேத ஸமாதி விதானம்*
*குர்வவதானம் மஹதவதானம்॥*

**ப்ராணாயாமம் எனப்படும் மூச்சுக்காற்றை கட்டுப்படுத்தும் பயிற்சியையும், ப்ரத்யாஹாரம் எனப்படும் புலனடக்கம் எனப்படும் கட்டுப் பாட்டினையும், நிலையான பொருள் எது, நிலை யற்ற பொருள் எது, எனப்படும் பாகுபாட்டினையும் ஆராய்ந்து யோசித்தலையும், ஜபம் செய்யும் கர்மாவையும், சமாதி எனப்படும் அசையா நிலையையும், மனத்தின் ஒருநிலைப் பாட்டையும், நீ ஏற்றுச் செய்தல் வேண்டும்.**

**– திரு. சீதாராமன், சென்னை.**

# சூரிய நமஸ்காரமும் யோகாசனங்களும் -- ஓர் பார்வை

டாக்டர் கி.ஜ. நிகிலா வெங்கட்
கோயம்பத்தூர், 8940991234

*''ஆதித்யஹ்ருதயம் புண்யம் ஸர்வசத்ரு விநாசனம்
ஜயாவஹம் ஜபேவ்நித்யம் அக்ஷயம் பரமம் சிவம்
ஸர்வமங்கல மாங்கல்யம் ஸர்வபாப ப்ரணாசனம்
சிந்தாசோக ப்ரசமனம் ஆயுர்வர்த்தன முத்தமம்''*

சூரிய பகவானுக்குரிய ஆதித்ய ஹ்ருதயம் சுலோகம் பாடி வழிபட்டால் மனச்சோர்வையும், நோய்களையும் தீர்த்து, உடலுக்கு சக்தி தருபவர் சூரிய நாராயணன்.

இராவணனுடன் போரிடும் போது ஸ்ரீராமர் ஆக்கமும் ஊக்கமும் பெறும் வகையில் அவருக்கு முனிவர் அகத்தியர் உபதேசித்த அற்புத சுலோகம் இது. இந்த சுலோகம் சூரிய நாராயணனை துதிக்கும் வகையில் அமைந்துள்ளது. நாமும் ஆசனங்களினால் சூரிய நாராயணனை வந்தனம் செய்யலாம் வாருங்கள்.

சூரிய நமஸ்காரம் நமது ஆன்மீக வாழ்வுடனும், ஆரோக்கிய வாழ்வுடனும் ஒன்றிய அறிவியல் மருத்துவக் கூறுகளை உள்ளடக்கிய நோய்தீர்க்கும் யோக பயிற்சியாகும்.

தொன்று தொட்டு நம் மக்கள் பின்பற்றி வந்த ஓர் ஆசார முறை சூரிய நமஸ்காரம். உடல் மற்றும் மனது உறுதி அடையவும் அமைதியடையவும் உதவும் ஆசாரமிது. இதை விதிமுறைகள்படி செய்யும் போது உடற்பாகங்களில் ஆற்றலும் சக்தியும் வருகின்றது. அதிகாலைநேரத்தில் நம் உடலில் படும் சூரிய ஒளி தேக ஆரோக்கியத்திற்கு முக்கிய பங்கு வகிக்கிறது. இதைத்தான் நமது புண்ணிய பாரத பூமியில் வாழ்ந்த ஆன்றோர்கள் காலை வெயிலில் ஆரம் பிக்கும் பித்தம், மாலை வெயிலில் தணிந்து போகும் என்றனர்.

சூரிய ஒளியைக் கொண்டு கொடிய நோயான காமாலையையும் குணப்படுத்த லாம் என்கிறது அதர்வண வேதம். மேற் கத்திய நாடுகள் உட்பட உலகின் எல்லா பாகங்களிலும் இந்த ஆசார முறை பிரசித்தி பெற்றிருக்கிறது. ஜிம்னாஸ்டிக், சன்பாத் என்ற பெயர்களில் சூரிய நமஸ்காரத்தை உட்படுத்தி உடற்பயிற்சிகள் செய்து வருகின்றனர்.

சூரிய நமஸ்காரம் வாயிலாக நமது உடலிலுள்ள எல்லா மூட்டுகளுக்கும் அசைவு ஏற்படுகிறது. சருமத்தில் வைட்ட மின் "டி" உற்பத்தி செய்யும் திறன் காலை சூரிய ஒளிக்கதிர்களுக்கும் உண்டு. கால் சியம் உற்பத்தியை கட்டுபடுத்தும் திறனும் உண்டு என்பது அறிவியல் துறைகள் அங்கீகரித்து உள்ளன.

மேலும் உடலுறுப்புகள் உறுதி பெறு வதால் காச நோயணுக்களின் ஆக்கிரமிப் பையும் தடுக்கின்றன.

தொடர்ச்சியாக சூரிய நமஸ்காரம் செய்வதினால் அகால வயது முதிர்ச்சியை ஓரளவுக்கு தடை செய்யலாம். மூட்டுகள் நல்ல லாவகமடைகின்றது. தொப்பை வயிறு வருவதை கட்டுபடுத்த இயல்கின் றது. மனதுக்கும் உடலுக்கும் உற்சாகம் நிலைநிறுத்தவும் சூரிய நமஸ்காரம் உதவுகின்றது.



# கண்ணன் கருத்துரை



*ச்ரேயான் ஸ்வதர்மோ விருண: பரதர்மாத்ஸ்வனுஷ்டிதாத் ।*
*ஸ்வதர்மே நிதனம் ச்ரேய! பரதர்மோ பயாவஹ: ॥* (3-35)

**தத்தமக்கு உரிய ஒழுக்கம் காலப்போக்கில் குறையுடையதாகக் காணப்பட்டாலும், அவற்றை விடப் புற ஒழுக்கங்களை நன்கு செயலாற்ற முடிந்தாலும், அப்புற ஒழுக்கங்களை விட தத்தம் ஒழுக்கமே யாவற்றினும் மிகச் சிறந்தது ஆகும். தனக்கு உரிய ஒழுக்கத்தைப் போற்றி இறந்தாலும் தவறில்லை. ஆனால் புற ஒழுக்கங்களைப் போற்றி வாழ்தல் மிகக் கேடு தரும்.**



**தொகுப்பு :**
**பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன், திருப்பதி.**

**சூரிய நமஸ்காரம் செய்பவர்கள் கடைபிடிக்க வேண்டிய சில விஷயங்கள்:**

சூரிய நமஸ்காரம் செய்வதற்கு மிகவும் உகந்த நேரம் சூரிய உதயமாகும் அதிகாலை நேரம். ஒவ்வொரு சூரிய நமஸ்காரமும் மொத்தம் பன்னிரண்டு ஆசன நிலைகளை உள்ளடக்கியதாகும். பன்னிரண்டு ஆசனங்கள் இணைந்தது ஒரு சுற்று. இவ்வாறு 12 நமஸ்கார சுற்றுகள் இணைந்தது ஒரு சூரிய நமஸ்காரமாகும்.

உங்களுக்குப் போதிய நேரம் இல்லாமல் உடல் நலத்திற்காக ஒரே ஒரு மந்திரத்தினைத் தேடிக் கொண்டிருந்தால், இதோ உங்களுக்கு விடை... பன்னிரண்டு யோகாசனங்கள் அடங்கிய ஒரு தொகுதி யான, சூரிய நமஸ்காரம் இதயத்திற்கு நல்ல பயிற்சியை அளிக்கும். சூரிய வணக்கம் என்று மொழி பெயர்ப்பு செய்யப்படும் இந்தத் தோற்றப் பாங்குகள், உடலை நல்ல வடிவத்தில் வைப்பதுடன் மனதையும்

## சாஸ்த்திர நீதிகள்–92

கல்யாணி பத காதோயம்
லௌகிகீ ப்ரதி பாதிமா ।
ஏதி ஜீவந்தம் ஆநந்தோ
நரம் வர்ஷ சதாத் அபி ॥

எப்போதுமே மனிதனுக்கு கஷ்டமிருக்காது. நல்லதும் ஒரு நாள் நிச்சயம் நடைபெறும் என்று நம்பிக்கையுடன் வாழ வேண்டும்.

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**



அமைதிப்படுத்தி, நலமுடன் வைக்கின்றது. அதிகாலையில் வெறும் வயிற்றுடன் சூரிய நமஸ்காரம் செய்வது சிறந்தது. உடல் நலம் பெற, இந்த எளிய, ஆயினும் பயனுள்ள, சூரிய வணக்கத் தொகுப்பினைச் செய்யத் துவங்கலாம் வாருங்கள்.

ஒவ்வொரு சூரிய வணக்கச் சுழற்சியும் இரண்டு தொகுப்புக்களைக் கொண்டது. இந்த 12 யோகா தோற்ற நிலைகளும் சேர்ந்து ஒரு தொகுதியாகின்றன. இரண்டாவது பகுதியினைச் செய்து முடிக்க அதே தோற்ற நிலைகளை மீண்டும் செய்து, வலது காலுக்குப் பதிலாக இடது காலை நகர்த்த வேண்டும்.

சூரிய நமஸ்காரத்தினைச் செய்வதில் நீங்கள் பல் வேறு காட்சி விளக்கங்களைக் கண்டிருக்கலாம். ஆயினும், ஒரு குறிப்பிட்ட வரிசையைப் பின்பற்றி சீராகப் பயிற்சி செய்தல் சிறந்ததாகும்.

உடல்நலனைப் பெறுவதைத் தவிர, சூரிய நமஸ்காரம் இந்தப் பூமியிலுள்ள உயிர்களை வாழவைக்கும் சூரியனுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள ஒரு வாய்ப்பும் ஆகும். அடுத்த பத்து நாட்களுக்கு ஒவ்வொரு நாளையும் சூரிய சக்திக்கு கருணை மற்றும் நன்றியுணர்வுடன் துவங்குங்கள். 12 சுற்றுக்கள் சூரிய நமஸ்காரம் செய்து, அதன் பின், பிற யோகப் பயிற்சிகளைச் செய்து, பின்னர் யோகநித்ராவில் ஆழ்ந்த ஓய்வெடுங்கள்.

உடல் ஆரோக்கியத்திற்கும், மகிழ்ச்சி மற்றும் அமைதிக்கு இது ஒரு தாரக மந்திரமாக விளங்குவதைக் காண்பீர்கள். இந்த விளைவுகள் நாள் முழுவதும் நீடித்து இருப்பதையும் உணர்வீர்கள்.

“சூரியனுக்கு முன் எழுவாய் சூரியனையே வெல்வாய்” என்ற வார்த்தையை எல்லோரும் அறிந்து இருப்பீர்கள். அதற்கேற்றபடி நாம் சூரியனுக்கு முன் எழுந்து சில யோகா பயிற்சிகள் செய்வதன் மூலமாக நமது உடல் ஆரோக்கியம் மற்றும் வலிமையை அதிகரிக்க முடியும். அதை தவிர்த்து தினமும் சூரியனை நோக்கி சூரிய நமஸ்காரம் செய்வதன் மூலமாக நமது உடலில் இருக்கும் அனைத்து நச்சுக்களும் வெளியேறி, உடலை வலுப்படுத்தும்.

தொடரும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலையான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தனது உடல் சுத்தத்துடன் மனசுத்தியும் ஆகிறது.

**ஆகாஸகங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க்கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதைகள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராண பொருட்களோடு மட்டுமல்லாமல் சித்திர, சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானை தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளை குறைத்துக் கொள்ளலாம்.

**புராணவரலாறு :**

மஹரிஷிகள், மௌத்கல்யர் என்கிற ரிஷியை அணுகி, வணங்கி, திருவண்பரிசாரம் என்கிற தலத்தின் பெருமையைச் சொல்லுமாறு கேட்கிறார்கள். அவர் கூறியதாவது:

சேரநாட்டு மன்னன் குலசேகரன் பற்பல நாடுகளை வென்று "ஜயசிம்மன்" என்ற விருதுப் பெயருடன், நாடு திரும்பும்போது, பட்டத்துக் குதிரையைக் காணாமல் துன்பப்பட்டு, தேடித்தேடி அலைந்து, இங்கு வரும்போது பட்டத்துக் குதிரையைக் காண்கிறான். மிகுந்த மகிழ்ச்சியுடன் தீர்த்தமாகிய லக்ஷ்மீதீர்த்தத்தில் நீராடி, தல எம்பெருமானான திருவாழ் மார்பனை சேவித்தபோது அகஸ்த்யர் அங்கு வருகிறார். அவர், மன்னனுக்குச் சொல்கிறார்:– மலயபர்வதம், இதன் தென்பகுதியில் "ஞானா ரண்யம்" என்கிற அடர்ந்த வனம். அங்கு "ப்ரஜ்ஜா" நதிக்கரையில் அத்ரி மஹரிஷியின் பர்ணசாலை. அதில், ஸப்தரிஷிகளும் தபஸ் செய்தனர். அப்போது ஒரு அசரீரி.... "இங்கு இருந்து வடமேற்கில் விஷ்ணுபாத தீர்த்தக்கரையும், அரசமரமும் உள்ளது. அது ஒரு ஒப்பற்ற தலம். அங்கு சென்று தபஸ் செய்யுங்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்" என்றது.

சப்த ரிஷிகளும் இங்கு வந்தார்கள், தபஸ் செய்தார்கள். நான்கு திருக்கரங்களுடன் பகவான் அவர்களுக்கு இங்கு சேவை சாதித்தார். பிரமனும் அங்கு வழிபட வந்து "திருவாழ் மார்பன்" என்பதற்கான காரணத்தைச் சொன்னார்.

பகவான், நரசிம்மாவதாரம் எடுத்து இரண்யனைக் கொன்றார். அப்போதும் உக்ரம் (சீற்றம்) குறையவில்லை. சின்னஞ்சிறு குழந்தையான பக்தன் பிரகலாதனுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைப் போக்கி, அவன் தந்தை இரண்யனை அழித்தும் கோபம் தீரவில்லை. தேவர்கள், மஹா லக்ஷ்மியை வேண்டினார்கள். நரசிம்மனாகிய பகவானின் உக்ரத்தையும், கோலத்தையும் பார்த்த மஹாலக்ஷ்மி, இங்கு வந்து, இங்கு உள்ள சோமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, கரையிலேயே அமர்ந்து தபஸ் செய்தாள். பகவான், திருமகளைத் தேடி இந்த தலம் – திருவண் பரிசாரத்தை அடைந்து, திருமகளுக்கு அருள்கிறார். மகாலக்ஷ்மி, வண்பதி அருள் வெள்ளமிடும் பதியான நாராயணனை சாரம் சார்ந்த இடம். "திருவண்பதிசாரம்" அல்லது "திருவண்பரிசாரம்" என்று புகழ் பெற்றது என்றும், திருவைத் தேடி இங்கு வந்து சஞ்சாரம் செய்ததால் "திருப்பதிசாரம்" என்றும் அழைப்பர் என்று கூறுகிறார்கள்.

சோழ அரசன் சோமவர்மன் போர்க்களங்கள் பலவற்றில் தோல்வி அடைந்து இங்கு வந்து, இப்பெருமானைப் பூஜித்து நாரதர் மூலம் குழப்பம் நீங்கி, தன்னுடைய அரச சபையில் வந்த "வசிஷ்டர்" மூலமாக ஏகாதசி விரத விசேஷத்தை அறிந்து, விரதம் இருந்து உய்வடைந்தான் என்பர்.

விபீஷணன், இங்கு வரும்போது, விபீஷணனின் மனத்தை அறிந்த இந்த எம்பெருமான் அவனுக்கு, இராமனாகவே காட்சி அளித்தாராம்.

**சிறப்புகள் :**

ஸ்ரீநம்மாழ்வாரின் திருத்தாயார், உடைய நங்கை அவதரித்த தலம். உடைய நங்கையின் பிரார்த்தனைக்குச்

# திருவண்பரிசாரம் 62

108 திவ்விய தேச வைபவம்



– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

செவி சாய்த்து, இந்த தலத்து எம்பெருமான் திருக்குருகூர் “காரியார்” என்பவரைச் இங்கு வரச் செய்தார், உடைய நங்கை, காரியாரை விவாகம் செய்து கொண்டாள். உடைய நங்கை புத்ரபாக்யத் துக்காக 41 நாட்கள் விரதம் இருந்து, முடியும்போது திருக்குருகூர் என்கிற ஆழ்வார் திருநகரிக்குத் திரும்பினார்கள். திரும்பும் வழியில் திருக்குறுங்குடி எம்பெருமானை சேவித்தார்கள். திருக்குறுங்குடி நம்பி சங்கல்பித்தான். கலிபிறந்து 43–ம் நாள், வைகாசிமாத விசாகத்தில் திருக்குறுங்குடி நம்பியே குழந்தையாக நம்மாழ்வாராக அவதாரம்.

எப்போதுமே, பகவானின் வலமார்பினில் வீற்றிருக்கும் திருமகள், திருவண்பரிசார எம்பெருமா னின் இடது திருமார்பில் விளங்குகிறார். இங்கு, குழந்தையாக, ஸ்ரீநம்மாழ்வாரை சேவிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | திருவாழ்மார்பன், திருக் குறளப்பன், கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம், வீற்றிருந்த திருக்கோலம். |
| தாயார் | : | கமலவல்லி |
| விமானம் | : | இந்த்ர கல்யாணவிமானம் |
| தீர்த்தம் | : | ஸோமதீர்த்தம், லக்ஷ்மீதீர்த்தம் |
| ப்ரத்யக்ஷம் | : | மஹாலக்ஷ்மி ஸப்தரிஷிகள், கருடன், காரி, உடையநங்கை |
| ஆகமம் | : | நம்பூதிரிகள் : “தந்த்ர சமுச்சயம்” என்கிற முறை |
| மங்களாசாஸனம் | : | ஸ்ரீநம்மாழ்வார். |
| விசேஷம் | : | மூலவரின் திருமேனி “கடு சர்க்கரையோகம்” என்கிற கலவையால் ஆனது என்பர். மூலவருக்குத் திருமஞ்சனம் இல்லை. |



**பாசுரம் :**

*“வருவார் செல்வார் வண்பரிசாரத்து இருந்த என்*
*திருவாழ் மார்வற்கு என்திறம் சொல்லார்*
*செய்வது என்?*
*உருவார் சக்கரம் சங்கு சுமந்து இங்கு உம்மோடு*
*ஒருபாடு உழல்வான் ஓர் அடியானும் உளன்*
*என்றே”*

– நம்மாழ்வார்

*“அடியும் குளிர்ந்தாள், அறிவும் குலைந்தாள்,*
*முடிகின்றாள் மூச்சு அடங்கு முன்னே - கடிது*
*ஓடிப்*
*பெண் பரிசு ஆர் அங்குப் பிறப்பித்து மீளுவார்?*
*வண் பரிசாரம் கிடந்த மாற்கு”*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

**நாமாக்கள்**

*571. ஓம் கதிஸத்தம: நம:*

சிறந்த தர்ம மார்க் கத்தைக் காட்டு பவனே.



ஓம் அப்ரதிபயாயை நம:

அருள நினைத்தால் அச்சமின்றி அருளுபவளே.

572 ஓம் ஸுதந்வா நம:

சிறந்த சார்ங்கத்தை உடையவனே.

ஓம் லிநயித்ர்யை நம:

அடியவர்குற்றத்தை நினைத்து அருளாத பெருமாளையும், தன் வழியில் இழுப்பவளே.

573. ஓம் கண்ட பரஸு: நம:

கோடாரியைத்தாங்கியவனே.

ஓம் மஹாஸநாயை நம:

திருந்தவழியின்றி குற்றம் செய்பவரை தன் வயிற்றில் ஒடுக்குபவளே.

(ஸம்ஹரிக்கும் லக்ஷணம் பொருந்தியவள்)

574. ஓம் தாருண: நம:

வெளிப்பகைவர், உட்பகைவர் யாவரையும் அழிப்பவனே.

ஓம் அம்ருதஸ்யந்திந்யை நம:

அடியவர்கள் உய்ய அறிவெனும் அமிர்தத்தை அளிப்பவளே.

575. ஓம் த்ரவிணப்ரத: நம:

வ்யாஸராகி, சாஸ்த்ரங்களை அளித்தவனே.

ஓம் ஸீமாயை நம:

பக்தர்களின் துக்கத்துக்கும், பெருமாளின் கண்டிக்கும் குணத்துக்கும் எல்லையாக இருந்து பெருமாளுடன் பக்தர்களை பிரியாதபடி சேர்ப்பவளே.

576. ஓம் த்விஸ்ப்ருக் நம:

பரவித்யையினால் அறியப்படுபவனே.

ஓம் யஜ்ஜகர்பாயை நம:

விரும்பிய பலன்களை அளிக்கும் யஞ்ஜம் முதலியவற்றை செய்ய இயலாத அசக்தர்கட்கு, தானே உபாயமாகப் பெருமாளை ஆக்குபவளே.

577. ஓம் ஸர்வத்ருக்நம:

எல்லாவற்றையும் காண்பவனே.

ஓம் ஸமேக்ஷணாயைநம:

பெருமாளுடன் கூட அவரைப் போலத் தானும் அதே ஸங்கல்பத்தைச் செய்பவளே.

578. ஓம் வ்யாஸ: நம:

வேதங்களை நான்காகப் பிரித்தவனே.

ஓம் ஆகூத்யை நம:

நல்ல எண்ணங்களை உதிக்கச் செய்பவளே.

579. ஓம் வாசஸ்பதி: நம:

ஐந்தாவது வேதமான பாரதத்துக்கு ஸ்வாமியே.

ஓம்ருக், யஜுஸ், ஸாம, கோஷாயைநம:

ருக், யஜுர், சாம வேத ஒலியாக இருப்பவளே

580. ஓம் அயோநிஜ: நம:

பிறப்பே இல்லாதவனே

ஓம் ஆராமவநோத் ஸுகாயைநம:

கரடுமுரடானதும் பண்படுத்தப்பட்டதுமான மரங்கள் அடர்ந்த பிரதேசங்களில் ஈடுபாடு உடையவளே.

ஸ்ரீமதே ஸ்ரீ கமலவல்லீநாயிகா ஸமேத
ஸ்ரீவாமநாய ஸ்ரீவல்லபாய பரப்ரஹ்மணே நம:

குறிப்பு: நாகர்கோயில் திருநெல்வேலி பேருந்து மார்க்கத்தில் நாகர்கோயிலிலிருந்து சுமார் 4 கி.மீ. வடக்கே இவ்வாலயம் அமைந்து உள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...

**வாசகர்களே...**

**ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்திய வாசம் செய்யும் கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்களுடைய வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அதாவது ஸ்வாமியின் திருலீலைகளை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக அதை எழுதி ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

எங்கள் முகவரி :
**பிரதான ஆசிரியர்,**
**“ஸப்தகிரி”, தி.தி.தே.,**
**கபிலத்தீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507.**
**0877- 2264543, 2264359.**

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

*உய்யக்கொண்டார் வாழித்திருநாமம் தொடர்ச்சி...*

*(சித்திரையில் கார்த்திகை நாள் சிறக்க வந்தோன்)* தமிழ் மாதங்களில் சித்திரை மாதம் முதன்மையானதாகும். "சைத்ர ஸ்ரீமாந் அயம் மாஸ". (அ.கா.3–3) என்று இராமாயணத்தில் சித்திரை மாதத்தைக் கொண்டாடியபடியே இந்தச் சித்திரை மாதமானது மிகச்சிறந்ததாகும். இந்த மாதத்தில் கார்த்திகை நக்ஷத்ரத்துக்கு சிறப்பாவது நித்ய ஸூரிகளில் ஜயத்ஸேநர் என்பவரின் அம்சமாக உய்யக்கொண்டார் அவதரித்த சிறப்பாகும். இவர் அவதரித்தது பராபவ வருஷம் சித்திரை மாதம் வெள்ளிக்கிழமை பௌர்ணமி கார்த்திகை நக்ஷத்திரமாகும்.

*(நாலிரண்டும் ஐயைந்தும் நமக்குரைத்தான்)* நாலிரண்டு – எட்டு எழுத்து மந்திரமான "ஓம் நமோ நாராயணாய:" என்ற திருமந்திரம் ஆகும். இதனை பதரிகாச்ரமத்தில் நரனுக்கு நாராயணன் உபதேசித் தான். ஐயைந்தாவது – இருபத்து ஐந்து எழுத்து கொண்ட "ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய நம:" என்ற துவய மந்திரமாகும். இதனை ஸ்ரீவிஷ்ணு லோகத்தில் விஷ்ணுவானவர் பெரிய பிராட்டிக்கு உபதேசித்தார். இவ்விரண்டு மந்திரங்களையும் தம்முடைய சீடர்களான மணக்கால் நம்பி, திருவல்லிக்கேணி பாண் பெருமாள் அரையர், ஸ்ரீபுண்டரீகதாஸர் முதலான சீடர்கள் மூலமாக நம் ஆசார்யர் வரை வாழையடி வாழையாக சொல்லும்படி உரைத்தார் உய்யக் கொண்டார். எட்டு எழுத்தான திருமந்திரத்தின் பொருளாவது "எம்பெருமானுக்கே உரியேனான நான் எனக்கு உரியன் அன்றிக்கே ஒழியவேணும். எல்லாரைக் காட்டிலும் தலைவனான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும்" என்பதாகும். இருபத்து ஐந்து எழுத்தாய் இரண்டு வாக்யமாக அமைந்த துவயத்தின் பொருளாவது "பிராட்டியோடு கூடிய ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளையே தஞ்சமாகப் பற்றுகிறேன். பிராட்டியோடு கூடிய நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் இருவருமான சேர்த்தியிலேயே ஆக வேணும்" என்பதாகும். மந்த்ர ரத்னமான துவய மந்த்ரமானது வீர்யம், பலம், மங்களத்தை அளிப்பது, வேத ஸாரமாயிருப்பது, பழையதாயிருப்பது. மேலும் துவயத்தின் பெருமையைப் பற்றிச் சொல்லும்போது



"ப்ரமாண ஸாரமாகை யாலே துவயம் ப்ரமாணம் என்றும், அதற்கு விஷயம் அர்ச்சாவதாரம் ஆகையாலே அதுவே உண்மையாய் அறியத்தக்கது என்றும் துவயத்தின் பொருளை அறிந்து உபதேசிப்பவன் ஆசார்யனாகையாலே அவனே ஞானமுள்ளவர்" என்றும் வார்த்தாமலையில் (136) உய்யக்கொண்டார் அருளியது காண்க.

*(நாலெட்டின் உட்பொருளை நடத்தினான்)* நாலெட்டாவது முப்பத்திரண்டு எழுத்துக்கள் கொண்ட சரம சுலோகமாகும். ஸர்வ "தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ / அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச://" என்று "எல்லா தருமங்களையும் விட்டு என்னை ஒருவனையே தஞ்சமாகப் பற்று. நான், உன் எல்லா பாபங்களையும் போக்கி மோக்ஷத்தைக் கொடுக்கிறேன்". இதனை கண்ணன் அர்ச்சுனனுக்கு திருத்தேர்த்தட்டில் நின்றும் உபதேசித்த பகவத் கீதையில் பதினெட்டாம் அத்யாயத்தில் வரும் 66வது சுலோகமாகும். சரமச்லோகத்தின் உட்பொருளாவது எல்லா தருமங்களையும் (உபாயமாக நினையாமல்) விட்டு எம்பெருமான் ஒருவனையே உபாயமாகப் பற்றுவதாகும்.

*(மாலரங்க மணவாளர் வளமுரைப்போன்)* மால் – பெருமை. மால் அரங்க மணவாளர் – பெருமை பொருந்திய அரங்கத்தில் உள்ள பெரியபெருமாள். வளம் – வண்+மை – செழுமை. வளம் – நன்மை. மணவாளனுக்கு நன்மையாவது – ஆண்டாள் அருளிய திருப்பாவைக்கு அமைந்த இரு தனியனில், உய்யக்கொண்டார், "அன்ன வயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப் பன்னு திருப்பாவைப் பல்பதியம்" என்று ஆண்டாள் அரங்கனுக்கு திருப்பாவை பாடினாள் என்கிறார். அதாவது ஆண்டாள் திருப்பாவை என்னும் பிரபந்தம் மூலமாக பாட்டுக்களை இனிய இசையுடன் பாடி அவற்றை ஸ்ரீரங்கநாதனுக்கு விலக்ஷணமான பாமாலையாக ஸமர்ப்பித்தாள் என்று வாசிக கைங்கர்யம் செய்தபடி. இதற்கு உரையிட்ட பிள்ளைலோகம் சீயர், "பூமிப்பிராட்டியாரான ஆண்டாள் விரும்பும் ஸ்ரீவராக நாயனார் தன்மையும், ஆண்டாள் அநுகாரத்தாலே விரும்புகிற கோபாலர் தன்மையும் பண்பின் ஒன்றாம் தன்மையாலும் அடியாரிடம் மையல் குணத்தாலும் பெரிய பெருமாளிடத்திலே காணலாயிருக்கும்" என்றும் அருளியது காண்க.

*(வையமுய்யக் கொண்டவர்தாள் வையகத்தில் வாழியே)* வையம் – உலகம். பிறவித் துயரிலிருந்து உய்யும் பொருட்டு ஸ்ரீமந் நாதமுனி களிடம் இருந்து திவ்வியப் பிரபந்தத்தைப் பெற்று உலகுய்யக் கொண்டவனார் உய்யக் கொண்டார். அதாவது ஸ்ரீமந்நாதமுனிகளிடம் இரு நிதிகள் இருந்தன. ஒன்று எம்பெருமானை அடைவதற்கு உறுப்பான பக்தி யோகம். மற்றொன்று எம்பெருமானுடைய ஸ்வரூபம், ரூபம், குணம், செல்வங்கள் ஆகியன பற்றிப் பேசும் ஆழ்வார்கள் அருளிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகும். சரீரம், பொருள், அறிவு, வசிக்கும் இடம், செயல்கள், குணங்கள், பிராணன்கள் ஆகியவற்றை ஆசாரியனுக்காக எவன் தரிக்கிறானோ அவனே சிஷ்யன் ஆவான் என்பதற்கு ஏற்ப இருந்த சிஷ்யர்களில் ஒருவரான உய்யக்கொண்டாரைப் பார்த்து ஸ்ரீமந்நாதமுனிகள், "நீரும் குருகைக் காவலப்பன் விரும்பினாற்போல பக்தி யோகத்தைப் பெற்றுப் போகிறீரா" என்று கேட்க, அவரும் "பிணம் கிடக்க மணம் புணர்வார் உண்டோ? என்கிறபடியே "உலகம் ஆத்மநாசம் அடைந்து பிணக்காடாய் இருக்கும் போது அடியேன் ஒருவன் மட்டும் எம்பெருமானோடு ஆத்ம விவாகம் செய்து கொண்டு மோக்ஷமடைவது சரியாகுமோ" என்கிறார்.

ஆதலால் "அடியேன் எப்படியானாலும் பரவா யில்லை. உலகம் உய்யும்படி திவ்வியப் பிரபந்தங் களை உபதேசிக்க வேணும்" என்று ப்ரார்த்தித்தார். இதனைக் கேட்ட ஸ்ரீமந்நாதமுனிகள் அவரை வாரி அணைத்து, "நீரே உலகையும், உலகைப் படைத்த நாராயணனையும், அவனைச் சொல்லும் திவ்வியப் பிரபந்தங்களையும், அதனைப்பெற்ற என்னையும் உய்யக்கொண்டவர். உம்மாலன்றோ நாம் மிகவும் அரும்பாடுபட்டு மாறன் அருள்பெற்று, பெற்ற அருளிச் செயல்கள் உலகெங்கும் பரவி அனைவரையும் உய்விக்கப் போகின்றன. எனவே நீர் உய்யக்கொண்டார் என்னும் பெயராலே கொண்டாடப்படுவீர்" என்று அருளி, திவ்வியப் பிரபந்தங்களை உபதேசித்தார். ஒரு முறை ஸ்ரீமந்நாதமுனிகளின் மாமனார் வங்கிபுரத்து ஆச்சி,

தம் மகளான ஸ்ரீமந்நாதமுனிகளின் தர்மபத்னியான அரவிந்தப்பாவையைத் தம் இல்லத்துக்கு சில நாள் அனுப்பி வைக்க வேண்டினார். ஸ்ரீமந்நாதமுனிகளும் இசைந்து வழித்துணையாக புண்டரீகாக்ஷரை அனுப்பி வைத்தார். ஸ்ரீமந்நாதமுனிகளுடைய தர்மபத்னியை விட்டு விட்டு திரும்பி வந்த அவரை அங்கு நடந்ததை வினவினபோது அவரை உணவு வகையில் உபசரித்த தம் மாமனார் திருமாளிகையில் உள்ளவர்களின் அச்ரத்தையை புரிந்து கொண்டார்.

“நீர் எப்படி இதனை பொறுத்திருந்தீர்” என்று கேட்க, “போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே” (திருமாலை 41) என்று தொண்டரடிப் பொடியாழ்வார் பாசுரத்தைச் சுட்டிக்காட்டினார். இதற்கு மகிழ்ச்சி அடைந்த ஸ்ரீமந்நாதமுனிகள் அவரைத் தழுவிக் கொண்டு “நீரன்றோ எம்மை உய்யக்கொண்டீர்” என்று கொண்டாடினார். அதனால் உய்யக்கொண்டார் என்ற திருநாமம் ஏற்பட்டது. இவ்வாறு ஆட்கொண்டவில்லி கோவிந்த ஆசார்யர் இயற்றிய நூலில் அமைந்தது காணலாம். உய்யக்கொண்டாருடைய சுயநலம் பேணாத பரந்த மனப்பான்மையாலே இன்று நாம் அருளிச் செயல்களாலே உய்ந்து போகிறோம்.

ஸ்ரீமந்நாத முனிகளின் சீடர்களில் குருகைக் காவலப்பன் ஸமாதி நிலையில் ஆழ்ந்து விட்ட படியால் உய்யக்கொண்டார் ஸ்ரீமந்நாதமுனிகளிடம் பெற்ற அர்த்தங்களைப் பிரசாரம் செய்தார் என்று திவ்யஸூரிசரிதம் கூறும். இதனாலேயே ஸ்ரீவைஷ்ணவ சமூகம் முழுவதற்கும் இவர் பரமாசார்யராய் வாக்ய குருபரம்பரை யிலும் ச்லோக குருபரம்பரையிலும் ஸ்ரீமந்நாத முனிகளுக்கு முன் அநுஸந்திக்கப்படுகிறார். மேலும் ஈடு முப்பத்தாறு ஆயிரப்படியின் ஸம்ப்ரதாய தனியன்களில் திருவாய்மொழிப் பிள்ளை “பங்கஜநேத்ர” என்றும், மணவாள மாமுனிகள் “சீர் உய்யக் கொண்டார்” என்றும் நாதமுனிகளுக்கு அடுத்தவராகக் காட்டுவது அறியற்பாலதாகும். பராசரபட்டரும் தாம் அருளிய ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் குருபரம்பரை வணக்க ச்லோகத்தில் “பத்மாக்ஷம் ப்ரேக்ஷிஷீய” என்கிற படியே “புண்டரீகாக்ஷரான உய்யக் கொண்டாரைப் பார்க்கக் கடவேன்” என்கிறார். இப்படிப்பட்ட ஆசார்யர் திருவடிகள் வையகத்தில் வாழ பல்லாண்டு பாடுவோமாக.

*வாழித் திருநாமம் தொடரும்...*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

### ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநு ஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக்கோயிலில் இடம் பெற்றுள் ளனர்.

☎ *0877–2264592.*

### ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :

இக்கோயில் திருப்பதி இரயில் நிலை யத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும்.

☎ *0877–2264584.*

### ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷி யால் இங்குள்ள சிவலிங்கம் தோற்றுவிக்கப் பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப்படுகிறது.

☎ *0877– 2264587.*

### அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ *0877–2264586.*



# கொண்டைக் கடலை

தெலுங்கு மூலம் : டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, 99850 02156

இந்தியக் கலாச்சாரத்தின் பல சுப நிகழ்வுகளில் பயன்படுத்தக் கூடிய நவ தானியங்களில் ஒன்றான "கொண்டைக் கடலை" பற்றி அறிந்து கொண்டு பயன் பெறுவோம்.

ஆஞ்சநேயருக்கு கடலையை சுண்டலாக செய்து நைவேத்தியமாகப் படைத்து பிரசாதமாக வழங்குகின்றனர். மேலும் பல பூஜைகளிலும் இந்த கடலையைப் பயன் படுத்துகின்றனர். ஆரோக்கியமான மருத்துவ குணமுடைய கடலையை சமஸ்கிருதத்தில் "சணக" என்றும், ஆங்கிலத்தில் பெங்கால் கிராம் என்றும், இந்தியில் சனேகாபீஜ் என்றும் அழைக்கப்படுகிறது. இது பாபிலியோனேசி என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது. இதனுடைய அறிவியல் பெயர் சைசர்ஏரீடினம் என்பதாகும். இப்போது இந்த கடலையின் உபயோகங்களைக் காண்போம்.



### முகப்பருவைப் போக்க :

சிறிதளவு கடலை மாவில் தேவையான அளவு எலுமிச்சை ரசம், பால் ஆகியவற்றை சேர்த்து முகத்திற்கு பூசிக் கொண்டு, ஒரு மணி நேரம் கழித்து முகத்தைக் கழுவிக் கொண்டால் முகப்பரு குறையும்.

### பொடுகுத் தொல்லை குறைய :

வாரத்தில் 2 முறை 100 கிராம் தயிரில் 10 கிராம் கடலைமாவு, 5 கிராம் வெந்தயப் பொடி கலந்து 2–3 மணிநேரம் ஊற வைத்து, தலைக்கு பூசி 1 மணி நேரம் கழித்து தலைக்குளியல் செய்தால் பொடுகுத் தொல்லை நீங்கும்.

### மாதவிடாயின் போது அதிகமாக இரத்தப்போக்கு ஏற்படுதலைக் குறைக்க :

கடலையை சிறிது சூடுபடுத்தி பொடி செய்து கொண்டு, சர்க்கரை 25 கிராம்,2–3 கிராம் சீரகப்பொடி ஆகியவற்றை நன்கு கலந்து நாள்தோறும் ஒரு முறை உட்கொண்டால் இப்பிரச்சனை நீங்கும்.

### நோய் எதிர்ப்பு சக்தி பெருக :

நாள்தோறும் இரவு நேரத்தில் 100 மி.லி. நீரில் 20–30 கடலைகள், 5–6 திராட்சை (உலர்ந்தது) போட்டு, அதனை ஊற வைத்து, காலை அப்பொருட்களை உண்டு, பின்னர் அந்நீரையும் குடித்தால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகும். உடம்பில் ஏற்படும் சோர்வு குறையும்.

### ஆண்களுக்கு ஏற்படும் சந்தான தோஷங்கள் குறைய:

கால்கிலோ கடலையை ஒரு நாள் முழுவதும் நீரில் ஊற வைத்து, அதனை மறுநாள் காய வைத்து சூடுபடுத்தி, பொடி செய்து கொள்ள வேண்டும். மேலும் ஒரு ஜாதிக்காயையும் பொடி செய்து கொள்ள வேண்டும். 125

மி.லி. நீரில் 250 கிராம் வெல்லப்பொடி கலந்து சூடுபடுத்தி கம்பிபாகு வரும் வரை கொதிக்க வைத்து அதில் கடலைப்பொடி, ஜாதிக்காய் பொடி கலக்க வேண்டும்.

பின்னர் 25 கிராம் நெய் மற்றும் 25 கிராம் தேன் ஆகியவற்றையும் சேர்த்து லேஹியமாக தயாரிக்க வேண்டும். இந்த லேஹியத்தை காலை, மாலை சிறிய நெல்லிக்காய் அளவு உண்டு 1 கப் வெதுவெதுப்பான பாலை பருக வேண்டும். இவ்வாறு செய்தால் ஆண்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகள் தீர்ந்து குழந்தை பாக்கியம் பெறலாம்.

**முகத்தில் ஏற்படும் மங்கு குறைய :**

வாரத்திற்கு இரண்டு முறை சிறிதளவு கடலைமாவு, அதனுடன் தேன் மற்றும் வெங்காய இரசத்தைக் கலந்து பூசிக் கொண்டு 15 நிமிடம் விட்டு முகத்தைக் கழுவிக் கொண்டால் மங்கு குறையும்.

**தலை வலி குறைய :**

இரவு படுக்கும் போது 100 கிராம் கடலையை ஒரு மண் பாத்திரத்தில் ஊற வைத்து காலையில் மிருதுவாக நசுக்கி, தகுந்தளவு நெய் இட்டு வதக்கி, 50 கிராம் கற்கண்டு பொடி கலந்து, இடித்து வெறும் வயிற்றில் உண்டு வந்தால் தலைவலி குறையும். இவ்வாறு வாரம் அல்லது பத்து நாட்கள் செய்ய வேண்டும்.

**முகம் அழகாக இருப்பதற்கு :**

கடலை, கொத்தமல்லி, சீரகம், வெந்தயம், அதிமதுரம் ஆகியவற்றின் பொடிகளை சம அளவில் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

வாரத்தில் 2–3 முறை, தகுந்தளவு இப்பொடியை எடுத்து,அதனுடன் எலுமிச்சை இரசம் அல்லது பால் ஆடையுடன் சேர்த்து முகத்திற்கு பூசி 1 மணி நேரம் விட்டு கழுவினால் முகம் மிகவும் பொலிவாகக் காணப்படும்.

**உணவு செரிமானத்திற்கு:**

நாள்தோறும் இரவு படுக்கும்முன் கைப்பிடி அளவு கடலையை ஊற வைத்து, காலை கடலையை எடுத்து அதனுடன் சுக்கு பொடி, சீரகப் பொடியை கலந்து உட்கொண்டால், செரிமான மண்டலங்களில் ஏற்படும் புளியேப்பம், வயிறு உப்பசம் போன்றவை குறைந்து உணவு நன்றாக செரிமானம் ஆகும். இம்மருந்தின் மூலம் கொழுப்பு சத்து குறையும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெற வும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.



# மங்கள சுலோகங்கள்

*அஹல்யா த்ரௌபதீ ஸீதா தாரா*
*மண்டோதரீ ததா ।*
*பஞ்ச கன்யாஹ் ஸ்மரேந் நித்யம்*
*மஹாபாதகநாசனம் ॥*

**மாபெரும் பாவங்கள் ஒழிவதற்காக**
**அகல்யை, திரௌபதி, சீதை, தாரை,**
**மண்டோதரி ஆகிய ஐந்து கன்னியரையும்**
**தினமும் நினைத்துக் கொள்ளவேண்டும்.**





# ஸ்ரீமத் பகவத்கீதை

தெலுங்கு மூலம் : திரு.கே. விஸ்வநாத சாஸ்திரி
தமிழாக்கம் : டாக்டர் சி. கோவிந்தசாமி

***************

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா உபதேசித்தருளிய கீதாமிருதத்தை, நாம் வேதத்தின் வடிவமாகவே பாவித்துப் போற்றி வருகிறோம். வேதங்கள் மற்றும் ஸ்ரீமத் பகவத்கீதை இவ்விரண்டும் மக்களுக்குத் தன் கடமைகள் இன்னது என எடுத்துக்கூறும் நூல்கள் என்பதை அறிந்து வைத்திருக்கிறோம். ஆனால், எவ்வளவு சிறந்த நூலாக இருந்தாலும் உபதேசமாக இருந்தாலும், அதைப் படிப்பவரின், கேட்பவரின் தகுதியைப் பொறுத்தே அந்த நூலின் சாராம்சம் என்ன என்று உபதேசத்தின் உள் நோக்கத்தைக் கிரகித்துக் கொள்ள முடியும்.

ஆனால், ஸ்ரீமத் பகவத்கீதை என்னும் இந்த கீதாமிருத உபதேசத்தைக் கேட்பதற்குத் தகுதியுடையவர் யார் என எண்ணிப் பார்த்தால், முதலில் இதைக் கேட்டது அர்ச்சுனன். காரணம், பரமாத்மா அர்ச்சுனனை மனதில் வைத்தே உபதேசம் செய்யத் தொடங்கினார். இருப்பினும் உபதேசத்தை அர்ச்சுனன் மட்டும்தான் கேட்டானா? என்றால் இல்லை. இந்தக் கீதாமிருதத்தைத் தேரின்மீது கட்டப்பட்டிருந்த கொடியில் இருந்த அனுமனும் கேட்டார். இவர்கள் இருவரும் நேரடியாகக் கேட்டவர்கள்.

இவர்கள் மட்டும் அல்லாமல் பகவானின் லீலைகளை எல்லாம் தன் ஞானப்பார்வைக் கொண்டு கவனித்து வந்த வேதவியாசரும் கூட கேட்டறிந்தார். அந்த வேதவியாசர் அனுக்கிரகத் தால், பகவானின் உபதேசம் கேட்கக் கூடிய தகுதிப்பாடு உடையவனாகிய சஞ்சயன் கேட்டான். சஞ்சயனின் முகமாக திருதராஷ்டிரனும் கேட்டார். எனவே, இந்த உபதேசத்தை இத்தனைப் பேரும் கேட்டிருந்தனர். இது நமக்கு வரலாறு காட்டும் உண்மை. மேலும், இவர்கள் மட்டுமே அல்லாமல் பல மகரிஷிகளும், சித்தர்களும், யோகிகளும் பரமாத்மாவின் லீலாவிநோதங்களை கண்டுணர்ந்த வர்களும் உபதேசம் பகவானிடமிருந்து எப்போது கிடைக்கும் என எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அவர்களும்கூட அருவுருவமாய் இருந்து கேட்டனர். எனவே, பகவான் உபதேசிக்கும்போதே பலரும் கேட்டு உணர்ந்தனர்.

எனவே, இது அர்ச்சுனனுக்கு மட்டுமே சொல்ல வேண்டும் என சொல்லப்பட்டது அல்ல. பகவான் உபதேசத்தை யாரெல்லாம் கேட்க வேண்டும் என எண்ணினாரோ அவர்களுக்கெல்லாம் கேட்பிக்கச் செய்தார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இவர்களில் முதலில் கேட்டது அர்ச்சுனன். அவர் ஒரு உண்மையானவர். மேலும் பரமாத்மாவுக்கு விருப்பமானவரும் ஆவார்.

பரமாத்மாவுக்கு எப்படியெல்லாம் அன்பு பாராட்ட முடியுமோ அப்படியெல்லாம் அன்பு செய்து அவர் அன்புக்குப் பாத்திரமானவர். பரமாத்மாவுக்கு அவர் பக்தரும் நண்பரும் உறவினரும் ஆவார். மற்றும் தேர்க்கொடியிலிருந்து கேட்ட அனுமனும் ஒருவர். இவரும் பரமாத்மாவுக்கு உண்மையான பரம பக்தனாவார்.

அதனால் பக்தர்களும் தன் உபதேசத்தைக் கேட்கலாம் என்ற முறையையும் பரமாத்மா வகுத்துக் காட்டியுள்ளார். அதேபோல வேத வியாசரும் கேட்டிருப்பதாகக் கூறிக் கொண்டோம் அல்லவா? எனவே வேதவியாசர் போன்ற தத்துவ ஞானிகளும் தன் உபதேசத்தைக் கேட்கலாம் என்கிறது. மேலும், தத்துவ ஞானம் இல்லாதவரும், பக்தியில்லாதவரும், அர்ச்சுனன் போன்று தகுதி இல்லாதவரும், எமக்கு பகவத்கீதை தேவையில்லை

என்று நினைப்பவர்களுக்காகவும் மேலும், இரண்டு பாத்திரங்களை அமைத்துக் காட்டினார். அவர்கள் சஞ்சயன், திருதராஷ்டிரன் ஆவார்கள்.

சஞ்சயன் என்பவன் ஒரு சாதாரணமானவராக இருந்தும், ஐம்புலன்களை அடக்கி, முயற்சி செய்தும் அம்முயற்சியில் சிறிது மேம்பாடு அடைந்தும் தத்துவ ஞானம் எவ்வாறு பெற முடியும் என்பதைப் பற்றி முயற்சித்துக் கொண்டிருப்பவர். அப்படிப்பட்ட சஞ்சயன் கூட இந்தக் கீதாமிருதத்தைக் கேட்பிக்க செய்ததின் மூலம் பரமாத்மா சாதாரண பக்தர்களும் கூட இதைக் கேட்கலாம் எனக் கூறாமல் கூறுகிறார். மேலும், குருடனும் எந்தவொரு நற்குணம் இல்லாதவனும் புத்திரபாசத்தில் சிக்கித் தவித்துக் கொண்டடு இருப்பவனும் ஆன திருதராஷ்டிரனுக்குக் கூட இந்த கீதாமிருதத்தைக் கேட்க வேண்டியதுதான் என பரமாத்மா நமக்கு மறைமுகமாகக் காட்டுகிறார். மற்றொரு வகையில் சிந்தித்துப் பார்போமேயானால் சஞ்சயன் அடிப்படையில் ஒரு சேவகர்.

எனவே ,கீழ் மட்டத்தில் உள்ளவர்க்கும் கூட இந்த பகவத் கீதை பயன்படும் என்பது தெளிவாகிறது. கீழ்நிலை மத்திய நிலை என்றில்லாமல் திருதராஷ்டிரன் போன்ற அரசனுக்கும், மேல்நிலை மக்களுக்கும் பயன் தருவதாக விளங்குகிறது. எனவே, எந்நிலையில் இருந்தாலும் பகவத்கீதை கேட்டுப் பயன்பெறும் தகுதியுண்டாகும். இருப்பினும் நாம் அர்ச்சுனன் நிலையில் இருப்பது மேன்மைத் தருவதாகும். அர்ச்சுனனின் சிறப்பு என்னவென்றால் பரமாத்மாவிடமிருந்து நேரடியாக உபதேசம் கேட்கக் கூடிய தகுதி படைப்பின் ஆரம்பத்திலேயே பிரஜாபதி. சனகாதிக்கு உண்டானது. பிறகு வேறு யாருக்கும் இந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த பரமாத்மாவின் உபதேசத்தைக் கேட்கக் கூடிய தகுதி அர்ச்சுனன் ஒருவருக்கு மட்டுமே இருந்தது.

எனவே நாம் கூட அந்த தகுதியைப் பெறவே முயற்சிக்க வேண்டும். இந்தக் கலியுகத்தில் மக்களின் எண்ணப் போக்கை நன்றாக அறிந்திருக்கும் பரமாத்மா நேரடியாக நம்முன்னே தோன்றாமல் அர்ச்சா அவதாரத்தில் தோன்றியுள்ளார். அவ்வவதாரத்தின் மூலமாகவே நமது எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வோம்.

அவ்வாறு செய்வதின் மூலம் நம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்வோமாக பரமாத்மாவின் அனுக்கிரகத்தைப் பெறுவதற்கு அரசனாகவோ, வீரனாகவோ இருக்க வேண்டும் என்றோ கிடையாது. எவரொருவர் தம் கடமையைச் சரிவர நிர்வகித்து வருகிறாரோ அவர்கள் பரமாத்மாவின் அருளுக்கு முழுவதும் பாத்திரமாவார்கள்.

ஸ்ரீமத் பகவத்கீதையில் பரமாத்மா ஆங்காங்கு சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு சொல்வதன் முகமாகப் பரமாத்மாவின் அனுக்கிரகத்திற்கு ஆளானவர்களையும் நமக்கு அடையாளம் காட்டுவதாக அமைகிறது. மேலும், பரமாத்மா துரியோதனனின் வாயிலாக சத்புருஷர்களின் பெயர்களையும் நல்ல வீரர்களின் பெயர்களையும் பேசவைத்து உள்ளார். அதனால் துரியோதனனுக்கு அவர்கள் மீது இருந்த கோபத்தையும் பொறாமையையும் வெறுப்பையும் எடுத்துக்காட்டி, அதன் காரணமாக துரியோதனன் அடைந்த இழி நிலையையும் நமக்கு தெளிவு படுத்துகிறார்.

அந்த சத்புருஷர்களின் பெயர்களை இந்த சுலோகத்தில் அறியலாம். நான்காவது சுலோகத்தில் துரியோதனன் துரோணாச்சாரியரிடம் சென்றது நாம் அறிந்ததே. துரோணாச்சாரியரிடம் சென்ற துரியோதனன் குருவை அவமானம் செய்யும் விதமாக பேசுவதும், அம்மட்டும் இன்றி அங்கிருந்த வீரர்களையும் கொச்சைப் படுத்தி பேசினான்.

*''அத்ர சூரா மஹேஷ்வாஸா பீமார்ஜுனஸமா யுதி*
*யுயுதானோ விராடச்ச த்ருபதச்ச மஹாரத:''*

பாண்டவர்கள் சேனையில் வீரர்களும் சூரர்களும் அனேகம் பேர் இருக்கின்றனர். “மஹேஷ்வாஸா” – பெரிய பெரிய வில்களையும் அம்புகளையும் அணிந்திருக்கின்றனர். வில்கள் ஒவ்வொன்றும் மிகவும் பெரியதாக உள்ளன. அனவரும் வீரம் மிக்கவராகக் காணப்படுகின்றனர்.

“பீமார்ஜுனஸமா யுதி” – அவர்கள் ஒவ்வொருவரும் பீமனுக்கும் அர்ச்சுனனுக்கும் சமானமானவர்களாக இருக்கின்றனர். “யுயுதானோ விராடச்ச த்ருபதச்ச'' – என்று மூவர் பெயரைச் சொல்லுகின்றான். “த்ருபதச்ச” – யார் என்றால் மஹாரத என்று

**பண்பாட்டு ஆடை**

- ⇨ திருமலையானின் வி.ஐ.பி. தரிசனத்திற்கும் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ⇨ ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- ⇨ பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/பஞ்சாபி டிரஸ்–சுடிதார்.

ஒரு சிறப்பு சொல்லால் சிறப்பு செய்கிறார். எனவே பாண்டவர் சேனையில் வீரர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களுள் முக்கியமாக மூவரைச் சொல்லியுள்ளேன்.

இதில் துரியோதன னின் பொறாமைக் குணம் நன்றாக தெரிவதைக் காணலாம். சற்று கவனமாக உற்று நோக்கி னால் துரியோதனன் யார் யார் பெயரையெல்லாம் உச்சரித் தானோ அவர்களோடு துரியோதனனுக்கு உள்ள சம்மந்தம் என்ன?

இதற்கு முன்னர் அவர்களுக்கும் இவருக்கும் உள்ள நெருக்கத்தை அறிந்தால் நமக்கு நன்றாக விளங்கும். அதாவது, “யுயுதானொ” என்று முதலில் கூறுகிறான். யுயுதானொ என்றால் நன்றாகப் போர் செய்யும் வல்லமை உடையவன் என்பது பொருள். இந்தப் பட்டம் “சாத்யகி” என்னும் யாதவ வீரருக்கு உரியதாகும். இவர் கிருஷ்ணரின் தம்பி முறை ஆவார்.

சாத்யகி என்ற இவர் பெயரை நாம் அனைவரும் கூட சற்று அறிந்திருக்கலாம். “சாத்யகி” பெயரையே முதல் முதலாக சொல்லக் காரணம் என்ன? பாண்டவர்களில் வீரர்களின் பெயர்களைச் சொல்வதென்றால் முதலில் அர்ச்சுனனுடைய பெயரையே அல்லவா சொல்ல வேண்டியிருக்கும்.

தொடரும்...


## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# சிறார் வாக்கு

*குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!*

**சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.**

***யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?***

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கடிதங்கள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

***பெரியோர்கள் செய்ய வேண்டியன...***

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

***நிபந்தனைகள் :***

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான**



**குழந்தைகளே எழுதுங்கள்! கோவிந்தன் திருவருளை பெறுங்கள்!!**

*படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :*

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி–517 507.



அலசுவோம்......

அறிவோம்....

ஆதிகாவிய நாயகர்களை......

# வால்மீகி (யார்)

திரு. சத்யதாரா, சென்னை,
9894526302.

**"ரத்னாகரன்"**

பார் முழுதும் பரந்த புகழ் கொண்டு பரிமளிக்கும் பதினெண் சித்தர்களில் ஒருவர் இந்த வால்மீகி. எந்த ஒரு சித்த புருஷருக்கும், கிட்டாத இணையற்ற பெருமை இவரை பற்றிக் கொண்டு நிற்பதே இவரின் அருமை ...! அப்படி என்ன பெருமை? தசாவதார நாயகன் பாரத நாட்டின் பழம் பெரும் காவியத்தின் தலைவன் "ஸ்ரீராமனின்" வரலாற்றினை ஸ்ரீமத் ராமாயணம் என்ற காவியமாக தந்து விட்ட, தன்னிகரில்லாத பெருமை கொண்டவர். ஸ்ரீராமனின் திவ்ய நாமம் தரணியெங்கும் உச்சரிக்கப்படும் காலம் வரை, இவரது நாமமும் கூடவே தொடருமன்றோ...!!

**யார் இந்த வால்மீகி...?**

ஸ்ரீமத்ராமாயணத்தை ஒட்டிய பல கிரந்தங்களில், வருணனுடைய பத்தாவது தலைமுறையில் பிருகுவின் வம்சத்தில் பிறந்தவர். பிருகுவின் சகோதரர்... பிரசேதஸின் புத்திரர் என்றும் பலவா றான அடையாளங்கள் கிடைக்கின்றன. ஆனந்த இராமாயணத்தில், இவரது சரிதம் விளக்கமாக காணப்படுகிறது. அத்யாத்ம இராமாயணத்தில், வால்மீகியே, தனது வரலாற்றினை ஸ்ரீராமனுக்கு பின்வருமாறு கூறுகிறார்...

"கிருணு என்ற ஒரு மகரிஷி. ஒருமுறை ஆழ்ந்த தவத்தில் இருக்கையில் அவருடைய கண்களில் இருந்து பெருகிய வீரியத்தினை, ஒரு சர்ப்பம் புஜித்தது. (சாபத்தின் காரணமாக சர்ப்பமாக இருந்தது ஒரு கந்தர்வப்பெண்) அந்த சர்ப்பத்தின் வயிற்றில் பிறந்தேன். பிறந்த க்ஷணம் முதல் பால்ய பருவம் எய்தும் வரை வனத்தில் இருந்த வேடர்களாலேயே வளர்க்கப்பட்டேன். ஆகாரம், ஆசாரம் எல்லாம் அவர்கள் குலப்படியே என்னை ஆட்கொண்டது. அவர்களது வர்ணத்தில் பிறந்த பெண்ணே எனக்கு மனைவியானாள். புத்திரர்களும் பிறந்தனர்.

குடும்பத்தினை காப்பாற்ற, மேற்கொண்ட தொழில் வழிப்பறிக் கொள்ளை. ஒருமுறை சப்த ரிஷிகள் வனத்தின் வழியே பயணம் செய்தார்கள். அவர்களை வழி மறித்தேன். மிரட்டினேன். கையில் இருக்கும் பொருட்களை பறிமுதல் செய்வதே நோக்கம். அவர்களில் தலைமையாக காணப்பட்டவர் ஒருவர், கழுத்தில் ஒரு கயிற்றினில் ஒரு வீணையை இணைத்து மாலையாக அணிந்து இருந்தார். அவர் சிறிதும் கலக்கமடையவே இல்லை. மிகவும் ஏளனமாக ஒரு நகைப்புடன் என்னிடம் ஒரு வினா வினை எழுப்பினார்.... எதற்காக இந்த பாவச் செயலை செய்கிறாய்? என்று. எனது மனைவி மக்களை காப்பாற்றுவது என் கடமையல்லவா? அதற்காகவே இந்த வழிப்பறி என்றேன். அதுவே உனது கடமை என்றால் .....இந்த பாவத்தில் தீய கர்மாவின் பலன்களில் அவர்களுக்கும் பங்கு உண்டல்லவா? என்கிறார்.

இதுவரை பெற்றிடாத ஒரு அனுபவம். யாரும் தன்னை கேட்காத ஒரு கேள்வி? நேராக வீட்டிற்குச் சென்று அவர்களிடம் இந்த கேள்விகளை கேட்டு,

அவர்கள் அளிக்கும் பதிலை பெற்று வர வேண்டும். ஆனால், வினா எழுப்பியவர், அது வரை தாங்கள் எழுவரும் அந்த இடத்திலேயே இருப்பதாக பிரதிக்ஞை செய்தார்கள். இவையெல்லாம் வியப்பாகவே இருந்தது. வீட்டிற்குச் சென்று வினாக்களை எழுப்பியதும், அவர்கள் அளித்த விடைகள் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கின.

"குடும்பத்தினை போஷிப்பது தலைவனின் கடமை .... அவன் செயல்களில் உள்ள பாவங்களின் பலனை குடும்பத்தினர் ஏற்றுக் கொள்ள இயலாது. கர்மாவிற்கு பொறுப்பு ஆனவன்தான் அதனுடைய பலன்களை அனுபவித்தாக வேண்டும்'' என்றனர். எனது புத்தியில் பேரிடி விழுந்தது போல் இருந்தது. ஓடோடி வந்தேன். என்னை வினவிய முனிபுங்கவன் பாதங்களில் வீழ்ந்தேன்.

"ஸ்வாமி என் மனதில் உள்ள இருள் நீங்கியது ....ஆனால் அடுத்தது என்ன, என்ன விமோசனம் என்று குமுறுகிறது" என்று அலறினேன். அவர் என்னை கருணையுடன் ஆசிர்வதித்தார். தொடர்ந்து ஒரு உபதேசம் செய்தார்.."நீயோ பிராம்மணன் ... ஆனால் நீசனாக வாழ்ந்து விட்டாய். உனது பூர்வ ஜென்ம புண்ணியத்தின் ... விளைவே, எங்களை நீ சந்தித்து வழி மறித்தது. இத்துடன் உனது பாவ பலன்கள் விலகி விட்டது. உனக்கு மோக்ஷமார்க்கத்தை உபதேசம் செய்கிறேன் என்றார். ஶ்ரீ ராம... உனது திவ்ய நாமத்தினை மாற்றி, "மரா மரா" என்று உச்சாடனம் செய்து கொண்டிரு. நாம் திரும்பி வந்து உன்னை காணும் வரை தொடர்ந்து ஜபித்த வண்ணம் இரு" ... என்று கூறி விட்டு மறைந்தார்கள். பின்னர்தான் புரிந்தது... நான் தொடர்ந்து உச்சாடனம் செய்தது ஶ்ரீராம தாரக மந்திரமே என்று....! ஆண்டுகள் கடந்தன. ஊன் உறக்கம் இன்றி பல்லாண்டு களான...!! ....என்னை சுற்றி பெரும் கறையான் புற்று வளர்ந்து கட்டுமானம் கொண்டு இருந்தது. நானும் ஏதுமறியாமல் தவத்தில் இருந்தேன். திடீரென்று அவர்கள் திரும்பி வந்து என்னை அழைத்தனர்.

அப்போது தான், என்னை சுற்றி கறையான் புற்றும், புதர்களும், அடர்ந்த மரங்களும் வளர்ந்து




மூடி இருந்தது கண்டு வியந்து, வெளியே வந்து அவர்களை நமஸ்கரித்து நின்றேன். அவர்கள் சந்தோஷத்துடன்".... நீ, ஶ்ரீ ராமனின் தாரக மந்திரத்தை ஆத்ம சுத்தியுடன், ஆழ்ந்து ஜபித்து வந்ததனால், சகல பாபங்களும் நீங்கி பரிசுத்தனாக ஆகி, மஹா ஞானியாகத் திகழ்வாய் ...பல்லாண்டு காலம் வளர்ந்த புற்றிலிருந்து வெளி வந்ததனால் ... நீ "வால்மீகி" என்ற பெயரில் அழைக்கப்படுவாய்'' என்று என்னை ஆசிர்வதித்தனர்.

மஹா ஞானியான வால்மீகி முனிவரின் வாழ்க்கையில் தொடர்ந்து ஒரு புனித நாள். அவரது ஆசிரமத்திற்கு விஜயம் செய்தார் மகரிஷி நாரதர். தேவரிஷி நாரதரிடம், தனக்கு உண்டான ஐயங்களைப் போக்கிக் கொள்ள பல கேள்விகள் கேட்டார் வால்மீகி. திவ்ய அஸ்திர சஸ்திர சக்திகளுடன், சாதுக்களை காக்க, சத்ருக்களை சம்ஹாரம் செய்து, இப்புவி மீது, ஸ்ருதி, ஸ்ம்ருதி ஆகியவற்றில் உபதேசிக்கப்பட்ட தர்மங்களின் ஸ்வரூபமாக, சகலவித கல்யாண குணங்களுடன் இருப்பது யார்? ... என்றெல்லாம் கேட்டார். நாரத மகரிஷியோ, பிரம்ம தேவனின் பரிபூர்ண அருளுடன், "ஸம்க்ஷேப ராமாயணம்" என்ற பெயரில் ஶ்ரீராமனது வரலாற்றினை உபதேசித்தார். இதுவே ஶ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் துவக்கத்தில்,

பாலகாண்டம் துவங்குவதற்கு முன் காணப்படும் பகுதி.

இந்நிகழ்ச்சி நடைபெறுவது ஸ்ரீராமன் அவதாரம் செய்து இருந்த சம காலம். இதனைத் தொடர்ந்து பிரம்ம தேவனின் உபாசனை மூலம் சித்திக்கப் பெற்ற, ஞான திருஷ்டியால், முக்கால வரலாற்றையும் உணர்ந்த மாபெரும் சக்தி அவரிடம் வியாபித்து இருந்த நிலையில், ஸ்ரீமத் இராமாயண காவியத்தை படைத்தார். ஸ்ரீ வால்மீகியால் படைக்கப்பெற்ற காவியம், பால காண்டம், அயோத்யா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம் ஆகிய பிரபலமான ஏழு காண்டங்களை கொண்டது.

இதனைத் தொடர்ந்து, சீதா தேவியார் தன்னுடைய தாயாரான பூமா தேவியுடன் ஐக்யமான பின், ஸ்ரீராமாவதாரத்தில், இடம் பெற்ற பல சுவையான வரலாற்றினைக் கொண்ட பகுதி ஆனந்த காண்டம் எனப்படுவது. இதில் காணப்படும் செய்திகள் பல்வேறு ரிஷிகளாலும், ஞானிகளாலும் அருளப் பட்டவை என்ற ஒரு கருத்தும் நிலவி வருகிறது. நமக்கு மிகவும் ஆழமான ஆராய்ச்சிகள் எல்லாம் வேண்டாம். இவ்வாறெல்லாம் கிரந்தங்கள் இருக்கின்றன என்று தெரிந்து கொண்டாலே அது முதல் படியாகும். மகரிஷி வால்மீகியினுடைய பெருமையை உணர்வதற்காகவே ஈண்டு, ஸ்ரீமத் இராமாயண காவியத்தின் பகுதிகளை நெருங்கினோம்.



ஸ்ரீராமன் அவதாரம் செய்திருந்த ...அதே சம காலத்திலேயே வாழ்ந்தவரானபடியால், தொடர்ந்து காவியத்தில் அவருடைய தொடர்பினைக் காண்போம்.

ஸ்ரீ ராமன் 14 ஆண்டுகள் வனவாசம் முடித்து பின் பட்டாபிஷேகம் பெற்று அயோத்யாவின் மன்னன் ஆகிறான். சில ஆண்டுகள் கழித்து, யாரோ ஒரு சலவைத் தொழிலாளி, இராவணேஸ்வரனிடம் இருந்து மீட்டு, சீதா தேவியை தான் ஏற்றுக் கொண்டது பற்றி ஏதோ அவதூறாகப் பேசுவதை தொடர்ந்து, உத்தமனான மன்னன், எந்த சந்தேகத்திற்கும் ஆளாகக் கூடாது என்று, கர்ப்பமாக இருந்த சீதா தேவியை, தியாகம் செய்து வனத்திற்கு அனுப்புகிறான். அங்கே தான் மகரிஷி வால்மீகியினுடைய பந்தம் தொடர் கிறது. சீதா தேவி, வால்மீகியினுடைய ஆசிரமத்தி லேயே அடைக்கலம் கொள்கிறாள். அங்கேயே லவன், குசன் என்று புத்ரர்களையும் பெற்று வளர்த்து வருகிறாள்.

இரண்டு குழந்தைகளையும் வால்மீகி வளர்த்து, அஸ்திர, சாஸ்திர கலைகள் பயிற்றுவித்து, வீரம் மிக்க சிறுவர்களாக விளங்கச் செய்கிறார். ஸ்ரீராமன் உடைய வரலாற்றினை "இராமாயணம்" என்ற நூலாக அருளி, இசையுடன் லவன் குசன் இருவருக்கும் கற்பிக்கிறார். அவருடைய உத்தரவுப்படி, லவன் குசன் இருவரும், அயோத்யா சென்று ஸ்ரீராமனுடைய அரசவையில்..... "ஸ்ரீராம காவியத்தை" பாடுகிறார்கள். மகரிஷியின் அருளால், ஸ்ரீராமன் தனது புத்திரர்களை அடையாளம் கண்டு கொள்கிறார். இதுவும் மகரிஷி வால்மீகியினால் செய்யப் பட்ட "ஸ்ரீராம கைங்கர்யமே".

உத்தரபிரதேசத்தில் உள்ள கான்பூர் நகரத்தின் அருகில் கங்கை ஆறு பாயும் "பித்தூரில்" தான் வால்மீகியின் ஆசிரமம் அமைந்து இருந்தது. இங்கு இருந்த வால்மீகியின் ஆசிரமத்தில் தான் சீதைக்கு லவன், குசன் எனும் இரட்டையர்கள் பிறந்தனர்.

பதினெண் சித்தர்களுள் ஒருவராகக் கருதப் படும் இவருக்கு, சென்னையில் ஒரு ஆலயம் அமைந்துள்ளது. அதன் காரணமாகவே, அப்பகுதி, வான்மீகியூர் என்றாகி, இன்று திருவான்மியூர் என்ற பெயரில், சிறப்பாக அறியப்படுகின்றது.

ஸ்ரீ ராமனோடு, ஸ்ரீமத் ராமாயணத்தை படைத்த வால்மீகி மகரிஷியினுடைய வரலாற்றினையும் அறிந்து கொண்டு, உரிய பிரார்த்தனைகள் மூலம், பெரும் ஞானமும், பெறற்கரிய ஐச்வர்யங்களையும் பெறலாம் என்பது, பாரதத்தின் பல பகுதிகளில் வியாபித்து அருள் மழை பொழிந்த பல ஆச்சார்யர்களின் வாக்கு.

# பக்தி

நீதிக் கதைகள்

திரு. வி. பி. அர்த்தனாரி,
கோவை,

ஆச்சார்ய பக்திக்கு சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தவர் ஸ்ரீமத் இராமானுஜரின் சீடர்களில் ஒருவரான வடுகநம்பி என்பவர். இவர் கர்நாடகாவில் சாலக்ராமம் என்ற ஊரில் அவதரித்தவர். குருவே தெய்வம் என பாவித்து எல்லா பணிவிடைகளையும் செய்து வந்தவர்.

ஒரு யாத்திரையின் போது ஒருநாள் இராமானுஜர் தான் தினசரி வழிபடும் விக்ரகத்தை வடுகநம்பியிடம் ஒப்படைத்து ஜாக்கிர தையாக கொண்டு வருமாறு பணித்தார். அந்த விக்ரகத்தை நன்றாக பார்சல் செய்து இராமானுஜரின் பாதுகை களோடு சேர்த்து கட்டினார் வடுகநம்பி. இதைக்கண்ட இராமானுஜர் ஏன் இப்படி செய்தாய்? இது அபசார மல்லவோ என்று கேட்டார். எனக்கு ஆண்டவனைவிட ஆசார்யரே முக்கியம் என பதிலுறுத்தார் வடுகநம்பி.

மற்றொரு சமயம், ஒரு பக்தர் எட்டெழுத்து மந்திரமான ஓம்நமோ நாராயணா என்று ஜெபித்துக் கொண்டே இராமானுஜரின் திருவடிகளில் விழுந்து வணங்கினார். "குருவே, உம் எதிரில் பிரத்யக்ஷமாக இருக்கும் தெய்வம். அப்படி இருக்கும்போது கண்ணால் காணமுடியாத கடவுளை ஏன் கூப்பிடுகிறாய்? என்று கேட்டாராம் வடுகநம்பி. குருமீது அவ்வளவு ஆழ்ந்த பக்தி கொண்டு வாழ்ந்தவர் வடுகநம்பி.

ஆசார்ய பக்திக்கு முக்கியத்துவம் தரும் நிகழ்வொன்று ஸ்ரீரங்கத்தில் நடந்தது. இராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்த சமயத்தில் அவருக்கு பணிவிடை செய்து வந்தார் வடுகநம்பி. ஒருநாள் கோயிலிலிருந்து உற்சவமூர்த்தி தெரு வழியே ஊர்வலம் வந்துக் கொண்டிருந்தது. உற்சவ மூர்த்தியை தரிசனம் செய்ய வெளியே வந்த இராமானுஜர் வடுகநம்பியையும் தரிசனம் செய்ய அழைத்தார். அப்போது வடுகநம்பி குருவிற்காக பாலை அடுப்பில் காய்ச்சிக் கொண்டிருந்ததால் இராமானுஜர் சொன்னதை காதில் போட்டுக் கொள்ளாமல் தன் பணியிலேயே கவனமாக இருந்தார். நான் அழைத்தும் உற்சவ மூர்த்தியை ஏன் தரிசிக்க வரவில்லை என்று கேட்டார் இராமானுஜர். எனக்கு ஆண்டவன் சேவையைவிட ஆசார்யரின் சேவையே முக்கியம் என்று பதிலுறைத்தார் வடுகநம்பி.



வடுகநம்பிக்கு ரங்கநாதனைவிட இராமானுஜரே முக்கியமாகத் தோன்றியது. பகவான் தன்னை வணங்கும் பக்தனைவிட ஆசார்ய பக்தியும் சேவையும் செய்யும் சீட னையே மிகவும் நேசிக்கிறார். ஆசார்யாரே பரமனை அடைய ஒரு உண்மை யான பக்த னுக்கு வழி காட்டும் தெய்வமாக விளங் குகிறார். மோட்ச சாதனத்துக்கு ஆசார்யாரின் வழிகாட் டலே மிகவும் முக் கியம்.

# திருப்பாணர்

சித்திரக் கதை

கதை மூலம் : திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
சித்திரம் : திரு. கே. துளசி பிரசாத்





திருப்பாணர் முனிவர் பேச்சை செவி மடுக்காததால் அருகிலிருந்த கல்லை அவர் மீது முனி எறிந்தார். பாணர் முகம் மீது அது பட்டு இரத்தம் கசிந்தது. திருப்பாணர் எழுந்து...
13
14
ஐயா! என் அபசாரத்தை மன்னியுங்கள். தூரமாகச் சென்று விடுகிறேன்! ரங்கா...
மறு வார்த்தைபேசாமல் சென்று விட்டானே.
15
இரத்தத்தை கண்டவுடன் முனியின் மனதில் அனுதாபம் உண்டாயிற்று. அரங்கனோ அன்றிரவு முனிவருடைய கனவிலே தோன்றி "உம்முடைய தோளிலே பாணரை ஏற்றிக் கொண்டு வாரும்" என கட்டளையிட்டார்.
16
மறுநாள் காவேரியில் நீராடி திருப்பாணரிடம் சென்றார். திருப்பாணரை தம் திருத்தோள்கள் மீது சுமந்து கொண்டு கோயிலுக்குள் சென்றார்.
17
என்னை இறக்கி விடுங்கள் ஐயா! அபச்சாரம்... அபச்சாரம்!
18
என் புண்ணிய பலன் இது தான் திருப்பாணரே
19
திருப்பாணரை சுமந்து கொண்டு முனி கோயிலை பிரதக்ஷிணம் செய்து, திருவரங்கன் பள்ளிகொண்டிருக்கும் திருமண்டபத்திற்குள் நுழைய திருப்பாணரும்...
20
ஸ்ரீரங்கநாதா! நேரடியாக எனக்கு தரிசனம் அருளினாயா? என்ன பாக்கியம் பெற்றேன் ஸ்வாமி.
21
22
திருப்பாணரே நீங்களும் ஒரு ஆழ்வாரே! ஆழ்வாரே!
திருப்பாணரும் அரங்கனின் வடிவினைக் கண்ட ஆனந்தத்தில் அமலனாதிபிரான் எனும் திவ்ய பிரபந்தத்தை அருளினார்
23
உமக்கு வாகனமாகி பேறுபெற்றேன்
24
ஸ்ரீரங்கா ரங்கா!!
25
யோகி வாகனர் ஆழ்வார்
27
28
முனிவாகனர் திருப்பாணர்
பக்தர்களும் பக்தியுடன் போற்றினர்...
26
அடுத்த இதழில் இன்னும் ஒரு கதையை பார்த்து படித்து மகிழலாம்.
முற்றும்.

## பல் சுவை பகுதி

1. திராவிட வேதம் இயற்றியவர் யார்?
   அ) நம்மாழ்வார் ஆ) பெரியாழ்வார் இ) ஆண்டாள்
2. ஸ்ரீராமனிடம் சரணடைந்தவர் யார்?
   அ) வாலி ஆ) இராவணன் இ) விபீஷணன்
3. துஞ்சும்போது அழைமின் என்று பாடியவர் யார்?
   அ) நம்மாழ்வார் ஆ) திருப்பாணர் இ) திருமங்கையாழ்வார்
4. முனிவாகனர் எனப்படுபவர் யார்?
   அ) திருப்பாணர் ஆ) மதுரகவி இ) திருமங்கை
5. அக்ஷராப்யாஸம் என்பது என்ன?
   அ) அமுதூட்டல் ஆ) கல்வி புகட்டல் இ) பூணூல் அணிவித்தல்

**விடைகள்**
1) அ, 2) இ, 3) இ, 4) அ, 5) ஆ

### பொருத்துக...

| | | | |
|---|---|---|---|
| 1. | கைசிக துவாதசி | - | அ. துலா ஸ்நானம் |
| 2. | ஐப்பசி | - | ஆ. துளசி |
| 3. | ஸ்ரீரங்கநாதர் | - | இ. குலசேகரர் |
| 4. | திருமலையில் படி | - | ஈ. லஷ்மி பூஜை |
| 5. | தீபாவளி | - | உ. திருப்பாணர் |

1.ஆ, 2.அ, 3.உ, 4.இ, 5.ஈ.



### தெரிந்து கொள்ளலாமே...

"எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்
எனக்கு அரசு என்னுடைய வாழ்நாள்"
-திருமங்கையாழ்வார்

நாராயணன் உபகாரணாகவும், தந்தை முதலிய எல்லா உறவு முறையாகவும், ஆள்பவனாகவும், வாழ் நாளாகவும் இருக்கின்றான் என்பதை அறிதல் வேண்டும்.

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

நம் தீபங்கள் வீடு திருநாளில் தீபஒளியில் ஜொலிக்கும் தீபாவளி ஏற்றுவதால்

தீபாவளி திருநாளில் தீபங்கள் ஏற்றுவதால் தீபஒளியில் நம் வீடு ஜொலிக்கும்.

### சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### விடுகதை பகுதி...

1. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது அது என்ன?
2. ஊசி போல் இருப்பான், ஜொலித்து எரிவான்அவன் யார்?
3. படபடக்கும், பளபளக்கும் பண்டிகை வந்தால் வானில் பறக்கும்?

1. பட்டாசு, 2. மத்தாப்பு
3. பட்டாசு


Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 501. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார்
லக்ஷ குங்குமார்ச்சனை
29-11-2021

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams
Printing on 25-10-2021

# திருமலை ஆலயத்தில் தீபாவளி
## 04-11-2021

